# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

டிசம்பர் 2010 ஜீவியம் 16 மலர் 8

இம்மாத மலரில்....

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி ........ 2
ஆகஸ்ட் 15 தரிசன தினத்தன்று அன்னைமுன் வைக்கப்பட்ட பிரார்த்தனைகள் ........ 3
லைப் டிவைன் ........ 9
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 21
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 22
சாவித்ரி ........ 39
நற்றிணையில் ஒரு நற்செய்தி ........ 41
அஜெண்டா ........ 44
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 47
அன்பர் கடிதம் ........ 51
யோக வாழ்க்கை விளக்கம் VI ........ 52
லைப் டிவைன்-கருத்து ........ 59
நான் அவளில்லை ........ 61

❀ ❀ ❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

சிறிய பக்தனும் உயர்ந்த மனிதனைவிடச் சிறந்தவன்.

தவறு நடக்க விடக்கூடாது. நடந்தால் அதைத் திருத்தாமல் மேலே போகக்கூடாது.

புறம் அகமானால் சிரமம் அதிர்ஷ்டமாகும். புறம் அகமாகச் செயல் அகத்தை நாட வேண்டும்.

சிறியதுள் பெரியது மறைந்திருப்பதை அறிவது அனந்தத்தை அறிவதாகும்.

## இம்மாதச் செய்தி

**கேட்காத காது**

**சமர்ப்பணத்தால் கேட்டால்,**

**நினைக்க முடியாத செல்வம்**

**நிதர்சனமாகும்.**



# ஆகஸ்ட் 15 தரிசன தினத்தன்று அன்னைமுன் வைக்கப்பட்ட பிரார்த்தனைகள்

N. அசோகன்

1. தங்களுடைய அருளால் வறுமையில் வாடுபவர்களுக்கும், இல்லாதவர்கட்கும் வசதியும், வருமானமும் கிடைக்கட்டும்.
2. நோய்வாய்ப்பட்டவர்களும், காயமுற்றவர்களும் பூரண உடல் நலம் பெறட்டும்.
3. வருத்தமாக இருப்பவர்களும், துணை இல்லாமல் இருப்பவர்களும் மகிழ்ச்சியும் துணையும் பெற்று உள்ளம் மலரட்டும்.
4. சண்டை சச்சரவுகளும், சுமுகக் குறைபாடுகளும் நிறைந்துள்ள இடங்களில் தங்களுடைய சுமுகமும் அமைதியும் நிலவட்டும்.
5. எந்த இடத்தில் எந்த வகையான ஆபத்து இருந்தாலும் உங்களுடைய பாதுகாப்பு செயல்பட்டு அந்த ஆபத்தை அந்த இடத்திலிருந்து விலக்கட்டும்.
6. சிரமங்களும், இடர்ப்பாடுகளும் விலக்கப்பட்டு, தேவைப்படும் இடங்களிலெல்லாம் வாய்ப்பும், அதிர்ஷ்டமும் கூடி வரட்டும்.
7. வலி, துன்பம், தீமை ஆகியவை எல்லாம் விலக்கப்பட்டு இவற்றிற்குப் பதிலாக மக்களின் வாழ்க்கையில் தங்களுடைய ஆனந்தமும், சந்தோஷமும் நிலவட்டும்.
8. மனிதனுடைய ஆன்மா விழித்தெழுந்து, மனிதனுடைய அறிவு, உடம்பு, உணர்வு ஆகிய மூன்றையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து மனிதனுடைய பர்சனாலிட்டிக்கு ஆன்மா தலைமை தாங்கட்டும். ஆன்மா வழங்கும் அன்பு, இனிமை, பேரின்பம் ஆகியவற்றையெல்லாம் மானிட சமூகம் பெறட்டும்.
9. எங்கும், எதிலும் இறைவனின் சாந்நியத்தியத்தை மக்கள் உணரட்டும்.

10. இதுவரையிலும் நாங்கள் பெற்ற அருளுக்கு வழங்கும் கைம்மாறாக எங்கள் இதயமெல்லாம் நன்றியறிதலால் நிரம்பட்டும்.

11. தங்களுடைய அருள் எங்கள் அறிவைச் சுத்தம் செய்து தவறான எண்ணங்களை அகற்றட்டும். எங்கள் இதயத்தைச் சுத்தம் செய்து தவறான உணர்வுகளையும், தவறான ஆசைகளையும் அகற்றட்டும்.

12. உங்களுடைய புத்துணர்வு எங்கள் செயல்பாடுகளில் வெளிப்பட்டு பழக்கத்திலிருந்தும், இறுக்கத்திலிருந்தும் இந்தச் செயல்பாடுகளை விடுவிக்கட்டும்.

13. அசுத்தம், ஒழுங்கீனம், விகாரம், இவையெல்லாம் நீங்கி இவற்றிற்குப் பதிலாக சுத்தம், ஒழுங்கு, அழகு ஆகியவை நிலவட்டும்.

14. வறண்டு காய்ந்து போன நிலங்களெல்லாம் மழையால் ஈரம் பெற்றுப் பசுமையாக மாறட்டும்.

15. வரம்பிற்குட்பட்ட சிறியதிலிருந்து வரம்பற்ற பெரியது வெளிவந்து பிஸிக்கல் லெவலில் இறைவனின் அற்புதம் மலரட்டும்.

16. ஸ்ரீ அரவிந்தர் விரும்பிய உலக ஒற்றுமையும் மற்றும் இந்தியா-வினுடைய ஆன்மீக தலைமையும் விரைவில் உண்மையாகட்டும்.

17. சுபிட்சம், கல்வி, ஆரோக்கியம், அமைதி, சுமுகம் ஆகிய இந்த நல்ல விஷயங்களெல்லாம் உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் பரவி உலகம் முழுவதும் இவற்றை அனுபவிக்கட்டும். இந்த உலகத்தில் ஒருவர்கூட பசியோடு ஒரு நாள்கூட பட்டினியால் வாடாமல் இருக்கட்டும்.

18. இவ்வுலகத்தில் இதுவரை ஆட்சி செலுத்தி வந்த மதம் மற்றும் பாரம்பரியம் என்று இவற்றின் ஆட்சி முடிவுக்கு வரட்டும். இவற்றிற்குப் பதிலாக ஆன்மாவின் சுதந்தரமும், புத்துணர்வும் சமூகத்தில் உதயமாகட்டும்.

19. மூட நம்பிக்கைகள் மற்றும் தேவையில்லாத பழக்க வழக்கங்களிலிருந்து மக்கள் விடுபடட்டும். இவற்றுக்குப் பதிலாக அறிவின் ஆதிக்கம் மக்களிடையே நிலவட்டும்.

20. உலகத்தில் மழை போதுமான அளவிற்கு உரிய நேரத்தில்



பெய்யட்டும். அதன் விளைவாக எங்கும் எப்பொழுதும் தண்ணீர்ப் பஞ்சம் இல்லை என்ற நிலை வரட்டும்.

21. ஊழல், லஞ்சம் போன்றவை முடிவுக்கு வரட்டும். ஆண்களும், பெண்களும் முறையாக பணம் சம்பாதிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளட்டும்.

22. திருமணம் என்பது உடல் இன்பம், மற்றும் பிள்ளைப்பேறு இவற்றிற்காக இல்லாமல் கணவன், மனைவி என்ற இருவருடைய பரஸ்பர ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய ஒரு ஸ்தாபனமாக மாறட்டும்.

23. பணம் இறைவனின் ஆதிக்கத்திற்குள் மீண்டும் வரட்டும். தங்களுடைய சத்தியஜீவிய திருவுருமாற்றப் பணிக்குத் தன்னா-லான உதவியைச் செய்யட்டும். தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வருவதால் தீய சக்திகளினுடைய பிடியிலிருந்து விடுபடட்டும்.

24. பணத்தின் மேல் மனிதன் வைத்திருக்கின்ற பேராசையிலிருந்து அவன் விடுபடட்டும். இப்படிப் பணத்தாசை காரணமாக அவன் செய்கின்ற குற்றங்கள் எல்லாம் முடிவுக்கு வரட்டும்.

25. ஜடத்துள் மறைந்துள்ள ஆன்மா வெளிவந்து ஜடம் ஆனந்தத்தின் வெளிப்பாடு என்பது நிரூபணமாகட்டும்.

26. குடும்பம் என்ற ஸ்தாபனம் பெற்றோர் தம் விருப்பப்படி குழந்தைகளை வளர்க்கின்ற கருவியாக இல்லாமல் குழந்தைகளின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவுகின்ற ஸ்தாபனமாக அமையட்டும்.

27. சமூகத்தினுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு, தனித்தன்மை வாய்ந்த ஆன்மீக நபராக ஒவ்வொரு மனிதனும் தலையெடுக்கட்டும்.

28. மானிட சமூகம் ஆசையின் பிடியிலிருந்து விடுபட்டு அதன் விளைவாக இறையானந்தத்தை அனுபவிக்கட்டும்.

29. மனிதன் அவனுடைய பகுத்தறிவு காட்டுகின்ற பிரிவினைகள், மற்றும் எதிர்மறையான இரட்டைகளிலிருந்து விடுபட்டு அவனுடைய ஆன்மா காட்டுகின்ற ஆன்மீக ஒற்றுமையைக் காணட்டும்.

30. அறிவின் வற்புறுத்துதல்களிலிருந்து விடுபட்டு ஆன்மா வழங்கும்

உள்ளெழுச்சியை மனிதன் காணட்டும்.

31. பெற்றுத்தான் வளர முடியுமென்று நினைக்கின்ற வரம்பிற்குட்பட்ட அகந்தையின் பிடியிலிருந்து மனிதன் விடுபட்டு, கொடுத்தும் வளரலாம் என்று நிரூபிக்கின்ற வரம்பற்ற ஆன்மாவின் தன்மையை மனிதன் உணரட்டும்.

32. இன்று வெளி வாழ்க்கையின் ஆதிக்கத்தால் கட்டுண்டு இருக்கின்ற மனிதன் அதிலிருந்து விடுபட்டு அகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு அகத்தால் புறத்தை ஆள முடியும் என்றுணரட்டும்.

33. கண்ணுக்குத் தெரிகின்ற வெளியிலிருக்கின்ற இயற்கை ஆதாரங்களையும், வளங்களையும்விட உள்ளிருக்கும் அறிவு ரீதியான ஆதாரங்கள் மேலும் சக்தி வாய்ந்தவை என்பதை மனிதன் உணரட்டும்.

34. அணு ஆயுதங்களால் வரக்கூடிய ஆபத்து உலகிலிருந்து விலகட்டும்.

35. போர் மற்றும் அழிவு ஆகியவை உலகிலிருந்து அழியட்டும்.

36. Life Response உண்மைகளை மனிதன் புரிந்து கொண்டு அவற்றைப் பயன்படுத்தி தன் வாழ்க்கையை மேலும் மேம்படுத்திக் கொள்ளட்டும்.

37. ஆண்களுக்கு அடங்கியிருந்து அவர்களுக்குச் சேவை செய்யும் நிலையிலிருந்து விடுபட்டு, பெண்கள் தங்களுடைய ஆன்மாக்களை வளர்த்துக் கொள்ளக்கூடிய சுதந்தர நபர்களாகத் தலையெடுக்-கட்டும்.

38. மனிதன் அவனுடைய கண்டுபிடிப்புகளுக்கு அடிமையாக இருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, அவற்றைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து தான் அதிபர் என்ற நிலையை அடையட்டும்.

39. உலகத்தினுடைய உண்மையான நிலைப்பாட்டை மனிதன் புரிந்து கொண்டு தற்பொழுது அவனுக்கு இருக்கின்ற தலைகீழான கருத்துகளிலிருந்து விடுபடட்டும்.

40. மதங்களுடைய கோட்பாடுகள் பொய்யானவை என்றும், அடிப்படை ஆன்மீக உண்மைகளுக்கும், அடித்துச் சொல்லப்படுகின்ற மதக் கோட்பாடுகளுக்கும் சம்பந்தமே இல்லை என்பதை மனிதன் உணரட்டும்.



41. ஆசைகளைப் பூர்த்தி செய்வதால் அடைகின்ற இன்பத்தைவிட அவற்றிலிருந்து விடுபடுவதால் கிடைக்கும் இன்பம் பெரியது என்பதை மக்கள் உணரட்டும்.

42. நாம் அறிவை பெருமையாக நினைக்கிறோம். ஆனால் அறிவு என்பது அறியாமையின் கருவி என்பதை உணர வேண்டும். உண்மையான ஞானம் என்பது அறிவைத் தாண்டிய நிலைகளிலிருந்து வருகிறது என்பதை மக்கள் உணரட்டும்.

43. வாழ்க்கையில் பாதுகாப்பையும், நிம்மதியையும் தேடுவதற்குப் பதிலாகத் துணிந்து செயல்படும் பொழுதுதான் முன்னேற்றம் கிடைக்கிறது என்பதை மக்கள் உணரட்டும்.

44. நாம் முனைந்து செயல்படும் பொழுது சாதிப்பதைவிட மௌன சக்தியின் மூலம் மேலும் அதிகமாகச் சாதிக்கலாம் என்பதை மக்கள் உணரட்டும்.

45. சுத்தம் மற்றும் காலம் தவறாமையினுடைய அருமையை உணர்ந்து இந்நாட்டு மக்கள் செயல்படட்டும். இதன் விளைவாக இந்நாட்டின் முன்னேற்றம் பல மடங்கு விரைவு பெறட்டும்.

46. கடின உழைப்பு மற்றும் தன்னையே சார்ந்திருத்தல் ஆகிய பண்புகளின் அருமையை உணர்ந்து அதன் விளைவாக அரசாங்க சலுகை மற்றும் மான்யங்களை உதறித் தள்ளிவிட்டு சொந்த முயற்சியில் இந்நாட்டு மக்கள் முன்னேறட்டும்.

47. மேலை நாட்டு கலாச்சாரத்தில் நமக்குப் பயனுள்ள அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டு தேவையில்லாத மேலோட்டமான அம்சங்களை இந்நாட்டு மக்கள் விலக்கட்டும்.

48. புலன் இன்பங்களைத் தேடி வாழ்க்கையை நடத்துவது என்பது வாழ்க்கையை வீணடித்துக் கொள்வது என்பதை மக்கள் உணர்ந்து மேலும் உயர்ந்த ஆன்மீக இன்பங்களைத் தேடுவதுதான் வாழ்க்கையின் உண்மையான நோக்கம் என்பதை உணர்ந்து மக்கள்

அவ்வாறே செயல்படட்டும்.

49. லைப் டிவைன் புத்தகத்தைப் பற்றிய அறிவு ஏதோ ஒரு சிலருக்குக் கிடைத்த பொக்கிஷமாக மட்டும் அமையாமல் உலகில் எல்லோருக்கும் பரவி எல்லோரும் பலன் அடையட்டும்.

50. பூவுலகத்திற்கு ஆண்டவன் வழங்கிய வரம் எல்லோரும் காணக்கூடிய நிதர்சனமான உண்மையாக விரைவில் நிரூபணமாகட்டும்.

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தெய்வ ரூபம் வெளித் தோற்றத்திற்காக,
அதில் தீவிரமில்லை.

***உணர்வில், தீவிர ஸ்பர்சம் (வெற்றியைத் தோல்வியாக) அம்சங்களைத் தலைகீழாகக் காட்டும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

சிறப்பான திறன், பூரண சமர்ப்பணம், காலத்தைக் கணத்தில் காண்பது, ஆழத்தை நாடுதல் போன்ற யோக முறைகள் அனந்தனின் அளவு கடந்த சக்தியைக் கண்டமான மனித வாழ்வில் கொணர்ந்து கண்டத்தை அகண்டமாக்க முயல்கிறது.

***கண்டத்தை அகண்டமாக்கும் திறனும் ஆழமும்.***





# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XX. Death, Desire and Incapacity

**Page 188, Para I:** The vital principle is working in Matter. Its appearance is Life. It is Life from the view of material existence. Ours is an evolutionary terrestrial existence. In the last Chapter we have reasoned from such data. One thing is clear in spite of appearance or its way of work under any conditions. The general principle must be the same everywhere. Life is a universal force. It is working to create substantial forms. It creates, energises, maintains and modifies those forms. It is done by mutual play and interchange. It is an exchange of conscious energy. It is done overtly or secretly. That fundamental character always remains. We inhabit the material world. Here Mind is involved in Life. It is subconscious. It is like Supermind which is involved in Mind. And this Life is instinct with an involved subconscious Mind. It is again involved in Matter. Therefore Matter is here as the basis. It is the apparent beginning. In the language of the Upanishads, Matter is *Prithivi*. It is the Earth-principle, the foundation. The material universe starts with the formal atom. The atom is surcharged with energy. It is instinct with the unformed stuff of a subconscious desire, will, and intelligence. Out of this Matter apparent Life manifests. It delivers out of itself the Mind imprisoned within it. It

does so by means of the living body. The Supermind is concealed in the Mind. Mind also has still to deliver out of itself that Supermind. The Supermind is concealed in the working of the Mind. We can conceive of a world otherwise constituted. Mind would not be involved in it at the start. But Mind consciously uses its innate energy. Thus it creates original forms of substance. It is not as here only subconscious in the beginning. Such a world would be quite different from ours. That energy has an intermediate vehicle of operation. It would always be life. The thing itself would be the same. Of course, the process is entirely reversed.

**Page 189, Para II:** It appears immediately that Mind is only a final operation of Supermind. So Life is only a final operation of the Consciousness-Force. Real-Idea is the determinative form and creative agent of this Consciousness-Force. Consciousness is a Force. It is the nature of Being. This Conscious-Being is manifested as a creative knowledge-will. It is the Real-Idea or Supermind. The Supramental Knowledge-Will is Consciousness-Force. It is rendered operative for the creation of forms. They are forms of united being. They are in an ordered harmony. We call that ordered harmony world or universe. So also Mind and Life are the same Consciousness-Force. It is the same Knowledge-Will. But they are operating for the maintenance of distinctly individual forms. It is a sort of demarcation, opposition and interchange. In each form of being there is a soul. It works out its own mind and life. It does so as if they were separate from the others. In fact they are never separate. They are the play of the one Soul, Mind and Life. They are the different forms of a single reality. It can be put in other words. We know Mind is the final operation of individualising of all Supermind. It includes the all-comprehending and all-apprehending Supermind. It is a process by which consciousness works individualised in each form. It works from the standpoint proper to it. And it does so with the cosmic relations.



Those relations proceed from that standpoint. Similarly, Life is the final operation by which the Force of Conscious-Being acts. It acts through the all possessing and all-creative will of the universal Supermind. It maintains its energies. It constitutes and reconstitutes individual forms. It acts in them as the basis of all the activities of the soul thus embodied. Life is the energy of the Divine. It continually generates itself in forms as in a dynamo. It plays with the outgoing battery of its shocks on surrounding forms. It also receives incoming shocks from all life around. They pour in upon and penetrate the form from outside, from the environing universe.

**Page 189, Para III:** This is our view. Life appears as a form of energy of consciousness. It is intermediary. It is appropriate to the action of Mind on Matter. In a sense, it may be said to be an energy aspect of Mind. There it creates and relates no longer to the ideas. It relates to motions of force. It relates to forms of substance. Let us immediately add something to it. Mind is not a separate entity. It has all Supermind behind it. It is Supermind that creates. Mind is only its final individualising operation. So, also Life is not a separate entity or movement. It has all Consciousness-Force behind it in every one of its workings. It is that Consciousness-Force that exists. It acts in created things. Life is only its final operation. It is intermediary between Mind and Matter that is Body. This is a dependence. Our ideas must be subject to these qualifications. We do not really know Life. It has a nature and a process. We know neither. The Consciousness-Force works in it. Life is only the external aspect and instrumentation. Till we know that, we cannot know Life. Then we can perceive it. We can then execute it with knowledge. It is individual soul-forms. They are mental and bodily instruments of the Divine. It is the will of God in Life. Then only Life and Mind proceed in paths of truth. The paths and movements are of an ever-increasing straightness

of the truth. It is in ourselves and things. It is constantly diminishing. They are of the crooked perversion of the Ignorance. Mind has to unite itself consciously with the Supermind. It is separated from it. It was separated by the action of Avidya. So, Life has to become aware of the Consciousness-Force. It operates in it for its own ends. It does so with a meaning of which life in us is unconscious. It is so because it is darkened in its action. Therefore it serves them blindly. Also it serves ignorantly. It is so because time is absorbed in the process of mentalising life and matter. Life must in its liberation and fulfillment serve luminously. Or it must do so with a self-fulfilling knowledge, power and bliss.

**Page 190, Para IV:** Our Life is subservient to the darkened Mind. Mind's operation is division. Our Life itself is darkened. It is divided. It undergoes subjection to death. It is also subjected to limitation, weakness, suffering and ignorant functioning. Our creature-mind is bound and limited. It is the cause of all suffering. There is an original source of perversion. It is the self-limitation of the individual soul. It is bound to self-ignorance because it regards itself as an exclusive concentration. It is a separate self-existent individuality to itself. It regards all cosmic action only as it presents to itself. It presents to its own individual consciousness. The presentation is to its will, force, knowledge, enjoyment and the limited being. It must see itself as a conscious form of the One. It must consider itself embracing all consciousness. It also embraces all knowledge, all will, all force, all enjoyment and all being. It must see all being as one with its own. The universal life in us is itself imprisoned. It is imprisoned in the mind. It is so because it is obeying the direction of the soul. Thus it is imprisoned in individual action. It exists and acts as a separate life. It has a limited insufficient capacity. It undergoes the shock. It does not freely embrace the shock and pressure. They are of cosmic life around it. It is thrown into cosmic interchange of Force. It is constant in the universe. It is a poor, limited, individual existence. Life at first helplessly suffers. It obeys the giant interplay. It has only mechanical reaction. Its reaction is upon all that attacks. They devour, enjoy, use, drive it. Consciousness develops. Light of its own emerges from the inert darkness. It is of the involutionary sleep. The individual existence is dimly aware of its power in it. It seeks first nervously. And then it seeks to master mentally. It tries to use and enjoy the play. The awakening to the power in it is gradual. It is an awakening to the self. Life is Force. Force is Power. Power is Will. Will is the working of the Master-Consciousness. Life in the individual becomes more and more aware in its depths. It too is the Will-Force of Sachchidananda. It is the master of the universe. It aspires itself to be individually the master of its own world. All individual life has an increasing impulse. It is to realise its own power. It is also to master as well as to know the world. The Divine in cosmic existence has a growing self-manifestation. It is its essential feature.



**Page 191 Para V:** Life is Power. Growth of the individual life means growth of the individual Power. Still we see its being a divided individualised life and force. It prevents it from really becoming master of its world. It would mean to be the master of the All-Force. This is a divided individualised consciousness. It has a divided individualised limited power. And such a will to be master of the All-Force. Only an All-Will can be that. If at all, the individual only by becoming again one with the All-Will can do it. Then it is All-Force. Otherwise the individual form must always be subject to three badges of limitation. They are Death, Desire and Incapacity.

**Page 192, Para VI:** Death is imposed on the individual life. In two ways it is done. One is the condition of its own existence. The other is by its relations to the All-Force. The latter manifests itself

in the universe. The individual life is a particular play of energy. It is specialized to constitute, maintain, energise. Finally it is to dissolve. It does so when its utility is over. It is one of the myriad forms. All serve this form. Each serves in its place, time and scope. It is the play of the whole universe. There is energy of life in the body. It has to support the attack of energies external to it. It is in the universe. It has to draw them in. It has to feed upon them. It is itself being constantly devoured by them. All Matter is food, says the Upanishads. This is the formula of the material world. *"The eater eating is himself eaten."* The life is organised in the body. It is constantly exposed. There is the possibility of being broken up by the attack of life external to it. Or its devouring capacity is insufficient. Or it is not properly served. Or there is no right balance. It is between two capacities. One is the capacity of devouring. The other is the capacity of providing food. Or it is a necessity. Food is for the life outside. It is unable to protect itself. It is devoured. Or it is unable to renew itself. Therefore it is wasted away or broken. It is a new construction or renewal. For this it has to go through the process of death.

**Page 192, Para VII:** It is not only so. Let us again see the language of the Upanishads. The life-force is the food of the body. And the body is the food of the life-force. It can be said in other words. The life-energy is in us. It supplies the material. The form is built by that. And it is constantly maintained. It is renewed. At the same time it is constantly using up the substantial form of itself. It thus creates this form. Also it keeps it in existence. There is a balance between these two operations. It may be imperfect. Or it is disturbed. It is so when the ordered play is thrown out of gear. It is of the different currents of life-force. Then disease and decay can intervene. It can commence the process of disintegration. There is the struggle for conscious mastery. There is the growth of mind. Both make the maintenance of life very difficult.



There is the increasing demand of the life-energy on the form. It is in excess of the original system of supply. It disturbs the original balance of supply and demand. A new balance is to be established. Before that many disorders are introduced. They are inimical to the harmony. Also to the length of maintenance of the life. There is the attempt at mastery. It always creates a corresponding reaction. It is in the environment. It is full of forces. They also desire fulfillment. They are intolerant. They revolt against. They attack the existence. It is this existence that seeks to master them. There too a balance is disturbed. A more intense struggle is generated. The mastering life is strong. It can be unlimited. Or else it can succeed in establishing a new harmony. It is with its environment. It cannot always resist and triumph. But one day it must be overcome and disintegrated.

**Page 193, Para VIII:** All these are necessities. Beyond there is a fundamental necessity. It is of the nature. It is the object of embodied life itself. It is to seek infinite experience on a finite basis. There is the form. It is the very basis of the organisation. It limits the possibility of experience. It can be done only by dissolving the form. It must seek the new form. The soul has limited itself. It does so by concentrating on the movement and field. It is driven back to seek its infinity. Now it is by succession. It adds moment to moment. Thus it stores up Time-experience. It calls this its past. In that Time, it moves through successive fields. And it moves through successive experience or lives. It is successive accumulation of knowledge, capacity, enjoyment. All this it holds in the subconscious or superconscious memory. That is its fund of past acquisition in Time. To this process change of form is essential. For the soul is involved in the individual body. For it, change of form means dissolution of the body. It is in subjection to the law. It is a law of supply and demand. It is supply of the material of form. The demand is on the material. There is the principle of constant

intershock. Also there is constant struggle. It is the struggle of the embodied life. It struggles to exist in a world of mutual devouring. And this is the law of death.

**Page 193, Para IX:** There is a necessity and justification of Death. It is this. It is not a denial of life. It is a process of Life. Eternal change of form is the sole immortality. Therefore death is necessary. The finite living substance aspires for that. Eternal change of experience is the sole infinity. The finite mind is involved in the body. It can attain that. There is the constant renewal of the same form-type. Our bodily life constitutes that between birth and death. This change of form cannot be allowed to remain that. The very nature of existence in Time and Space demands another variation. It is the variation of experience. This is done by throwing the experiencing Mind into new forms. It must be in new circumstances of time, place and environment. For this the form-type must be changed. Unless it is done, it cannot be effectuated. This is only the process of Death. It is only by dissolution. It is by devouring of life by Life. It is only the absence of freedom. It is a compulsion. It is a struggle and a pain. It is a subjection to something. It appears to be Not-Self. It makes this necessity. It is salutary. It is a change terrible to our mind. It is undesirable to our mentality. It is the sense of being devoured and broken up. It appears to be destroyed and forced away. It is the sting of Death. Some have the belief in survival after death. It is personal. Even that cannot wholly abrogate.

**Page 194, Para X:** This process is a necessity. It is a necessity of mutual devouring. We see it to be the initial law of Life in Matter. Life, says the Upanishad, is Hunger. Hunger is Death. And by this Hunger, *asanayamrtyuh,* the material world has been created. For Life here assumes a mould. It is material substance. And material substance is Being. The Being is infinitely divided. It is seeking



infinitely to aggregate itself. There are two impulses. They are infinite division and aggregation. The material existence of the universe is constituted between these two impulses. The individual is the living atom. The individual attempts to maintain itself. It also tries to aggrandise itself. It is the whole sense of Desire. There is an ineradicable impulse of Existence. It is a physical, vital, moral, mental increase. It is done by a more and more all-embracing experience. It is also a more and more all-embracing possession. It is an absorption, assimilation, enjoyment of the inevitable. It is a fundamental experience. It is divided and individualised. It is secretly conscious of its infinity. It is all-embracing and all possessing. There is a secret consciousness. There is an impulse to realise it. It is the spur of the cosmic Divine. There is the lust of the embodied Self. It is within every individual creature. It seeks to realise it first in terms of life. It does so by an increasing growth and expansion. Ours is a physical world. It can be done only by feeding on the environment. It does so by aggrandizing itself. It is through the absorption of others. Or by what is possessed by others. It is a necessity. It is the universal justification of Hunger. It exists in all forms. Still what devours must be devoured. There is the law of interchange. It is of action and reaction. It is of limited capacity. And therefore it is of final exhaustion. It succumbs, governs all life in the world.

**Page 195, Para XI:** In the conscious mind, vital hunger transforms itself into higher forms. The vital hunger is in the subconscious life. What is vital hunger becomes craving of Desire in the mentalised life. In the intellectual life, it is straining of Will. Intellectual life is thinking life. The movement of desire must continue. It ought to continue until the individual has grown sufficiently. Then he becomes master of himself. It increases his union with the Infinite. It is the Infinite possessor of this universe. Desire is the lever. The divine Life-principle effects its end. It is the end of self-

affirmation in the universe. It is an attempt to extinguish it. It is in the interests of inertia. It is a denial of the divine Life-principle. It is a Will-not-to-be. And it is necessarily ignorance. One cannot cease to be individually except by being infinitely. Desire ceases to be desire rightly. It is by becoming the desire of the infinite. Then it satisfies itself. It is by a supernal fulfillment. It gives an infinite satisfaction. It is in the all-possessing bliss of the Infinite. Meanwhile it has to progress from type to type. Now it is in mutually devouring hunger. It moves to mutual giving. It is an increasingly joyous sacrifice. It is done by interchange. The individual gives himself to other individuals. He receives them back in exchange. The lower gives itself to the higher. The higher gives itself to the lower. Each is fulfilled in the other. The human gives itself to the Divine. The Divine gives itself to the human. There is the All in the individual. There is the All in the universe. Each gives itself to the other. The one receives its realised universality. It is a divine recompense. Thus there is the Law of Hunger and also a Law of Love. There is the Law of division. Also the Law of unity, the Law of Death and Law of immortality. They interchange. Such is the necessity and justification of Desire. It is a self-fulfilment of Desire. It is the culmination. It is the work of the universe.

**Page 195, Para XII:** This mask of Death is assumed by Life. It results from the movement. It is the movement of the finite. The finite seeks to affirm its immortality. Desire is the impulse of the Force of Being. It is individualised. It affirms progressively in the terms of Time and Space. It is succession and self-extension. It is within the framework of the finite. It is infinite Bliss, the Ananda of Sachchidananda. The impulse assumes the mask of Desire. It comes directly from the third phenomenon of Life. It is the law of incapacity. Life is an infinite Force. It works in terms of the finite inevitably. There is the overt individualised action. It is in the finite. Throughout its action its omnipotence must appear. It must



act as a limited capacity. Also it is a partial impotence. Behind every act of the individual there is something. It is the superconscious and subconscious presence. It may be weak, futile, stumbling. It is of infinite omnipotent Force. It is indispensable. Without it no single movement of the cosmos can happen. There is the sum of universal action. Each single act and movement falls into it. It is by the fiat of omnipotent omniscience. It works out as the Supermind. It is inherent in things. The Life-force is individualised. It is limited to its own consciousness. It is full of incapacity. It has to work against life-forces. It is a mass of environing forces. They are individualised. It is subject to control by the infinite Life. It has its denial. Its total will has a trend of its own. The trend may not agree immediately. There is the limitation of force. There is the phenomenon of incapacity. There are three characteristics. This is the third. It is of the individualised, divided Life. There is something on the other hand. There is the impulse of self-enlargement. Also the impulse of all possession is there. It does not and is not meant to measure or limit itself. It can be done by the limit of the present force or capacity. Hence there is a gulf. It is between two impulses. One is to possess and the other is the force of possession. Desire arises from there. There may be no such discrepancy. If so, the force could always take possession of its objects. It can always attain securely its end. Then desire would not come into existence. Only a calm and self-possessed will would be there. It would be without craving. The Will of the Divine is such.

**Page 196, Para XIII:** The individualised force is the energy of a mind. Suppose the mind to be free from ignorance. In that case no such limitation would be there. No such desire would intervene. The mind would not be separated from Supermind. Then it would be a mind of divine knowledge. It would then know its intention. It would know the scope and the inevitable result of its acts. Then it

would not crave or struggle. It would put forth an assured force self-limited. It would be to the immediate object in view. It would stretch beyond the present. It would undertake movements not intended to succeed immediately. They would not be subject to desire or limitation. There are failures of the Divine. They too are acts of omniscience, omnipotence. It knows the right time and circumstance for the incipience. It knows the vicissitudes. It knows the immediate and final results of its cosmic existence. The mind of knowledge in unison with the divine Supermind would participate in this omniscience. It would be an all-determining power. The individualised life force here is an energy. We have seen what it is. It is the energy of individualising Mind. It is ignorant. It has fallen from the knowledge of its own Supermind. Therefore incapacity is a necessity. It is necessary to its relations in Life. It is inevitable in the nature of things. There is a practical omnipotence. It is of the ignorant force. It is unthinkable even in a limited sphere. In that sphere such a force would set itself against the working of the divine. The divine is omnipotent and omniscient. It would unfix the fixed purpose of things. It is an impossible cosmic situation. There is the struggle of the limited forces. It increases its capacity by that struggle. It is under the driving impetus. It is of the instinctive or conscious desire. It is the first Law of Life. As with desire so with strife. It must rise into a mutually helpful trial of strength. It is a conscious wrestling of brother forces. In this, the victor and the vanquished equally gain and increase. There is an influence by action from above. There are other influences by retort of action from below. Both gain. There is the strenuous clasp of Love. There is the convulsive clasp of strife. Both in the divine interchange receive a happy shock. Still strife is necessary. It is a salutary beginning. Death, Desire and Strife are the trinity of divided living. It is a triple mark of the divine Life-principle. It is the first essay of cosmic self-affirmation.

❀ ❀ ❀



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

181. *மழை பெய்து வளராதது, பனி பெய்து வளருமா?*

✧ **வாழ்வின் மழையில் வளராத பயிர்**
**அருளின் பனியில் வளரும்.**

182. *தன் முதுகு தனக்குத் தெரியாது.*

✧ **மனம் முழுமையை அறியாது.**

183. *போகாத ஊருக்கு வழி கேட்கிறான்.*

✧ **போகாத ஊருக்கெல்லாம் வழி தெரியும் ஞானம்.**

184. *தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால், தம்பி சண்டப் பிரசண்டன்.*

✧ **தட்டிக் கேட்பதால் வளரும் சண்டப் பிரசண்டம்.**

185. *ஐந்துக்கு இரண்டு பழுதில்லை.*

✧ **ஐந்தில் ஐந்தும் பழுதற்றவை.**

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நிலையிலுள்ள குறை, அடுத்த கீழ்நிலையில் வேறொரு நிறைவால் சரி செய்யப்படும்.

***மேலேயுள்ள குறை கீழேயுள்ள நிறைவால் சரியாகும்.***

# அன்பு அமிர்தமாகி,
# அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **திருவுள்ளம் பலிக்கட்டும் (Let Thy Will be done).**

இதைவிடப் பெரிய மந்திரமில்லை. தன் மன உறுதியைச் சரணம் செய்ய பிரம்மாண்டமான உறுதி தேவையென அன்னை கூறுகிறார்.

ஒரு பெரிய விசேஷம் இதில் என்னவென்றால்,

1) எவ்வளவு உண்மை (sincere)ஆக இருந்தாலும் நாம் திருவுள்ளம் எனக் கூறும் பொழுது நம் மனமும் வாயும் 'என் இஷ்டம்' எனக் கூறும். அதைச் சரியாகச் சொல்ல உள்ளே தெய்வத்திற்குரிய உண்மை (sincerity) தேவை.

2) அப்படி நாம் பூரண உண்மையுடன் 'திருவுள்ளம்' எனக் கூறும்பொழுது, அன்னை நாம் ஆழ்ந்து விரும்புவதையே செய்வார்.

   *சாவித்திரி எமனைக் கரைத்து, சத்தியவானை மீட்டபின் இறைவனைச் சந்திக்கிறாள். இறைவன் அவர்கள் இருவருக்கும் சொர்க்கத்தை அளிக்க முன் வருகிறார். சாவித்திரி மறுத்து, தான் உலகை உய்விக்க வந்தவள், சொர்க்கத்தை நாடி வரவில்லை என வாதாடி மேலே செல்கிறாள்.*

3) நம் உண்மையை அன்னை ஏற்பது கடினம். அப்படி முடிவாக ஏற்றால் வாழ்வு கடினமாகும். ஒரு மாமியாரைத் தாயாராகத் தருவார். வெல்வது சிரமம். வென்றால் சில நிமிஷ அபரிமிதமான பூரிப்பும் பல மணி பொறுக்க முடியாத வேதனையும் வரும்.



| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | -- | வழிபாடு | -- | பணிவு |
| துதித்தல் | -- | அர்ப்பணம் | -- | ஆனந்தம் |
| அன்பு | -- | பூரிப்பு | -- | சரணாகதி |

ஆகியவை 9 கட்டங்கள்.

முதற்கட்டம் நம்பிக்கை. நமக்கு அதுவேயில்லை. மீதிக்கு என்ன செய்வது?

உனக்கு வரும் தம்பதி ஆண்டவன் கொடுத்த பரிசு என ஏற்க முடியுமா?

கல்லானாலும் கணவன்.

கழுதையானாலும் மனைவி என்றால்,

கல் விக்ரஹமாகும்.

கழுதைக்கு அன்னை (Mother) பெருங்கவனம் செலுத்தினார்.

பாரதி கழுதைக்குட்டிக்கு முத்தமிட்டார்.

கழுதை கற்பக விருக்ஷமென்பது தத்துவம்.

காமதேனு, கற்பக விருக்ஷம், அக்ஷய பாத்திரம் நம் அனுபவத்தில் மனைவி, கணவன்.

இது எளிய (discipline) கட்டுப்பாடு.

இதைச் செய்ய முடியாதவருக்கு யோகமில்லை.

மயிரிழை சுதந்தரம் கொடுத்தால் மடம் பிடுங்குவார்.

முழு சுதந்தரம் பிரியமாகக் கொடுத்து எப்படிக் குடும்பம் செய்வது?

மருமகள் தெய்வம், வேலைக்காரி கடவுள் என்பவை எளிய (discipline) கட்டுப்பாடு.

✡ **அம்மா, அப்பாவைத் திரும்பிப் பார்க்காத பிள்ளையுண்டு.**

மனம் கடுமையாக இருந்தால், மக்கள் உதாசீனம் செய்வர்.

**உலகில் இந்தப் பிள்ளை போல் கழிசடைகள் குறைவு.**

**கழிசடை திருவுருமாறினால் கன கம்பீரமாக இருக்கும்.**

அது கழிசடையாக இருப்பதின் ஆன்மீக இரகஸ்யம்.

**யார் எந்த விஷயத்தில் எப்படியிருந்தாலும் (Transformation) திருவுருமாற்றம் வேண்டும் என நினைப்பது (Mother's Luck) அன்னை அதிர்ஷ்டம்.**

அது அருளைக் கடந்த பேரருள்.

அது 10 செகண்ட் மனதில் வந்து தங்கினால் 10 வருஷமாக பாக்கியானது நடக்கும்.

அதைச் சாதிக்கப் பிறருக்குச் - மற்ற வக்ரங்கட்கு - சேவை செய்ய வேண்டும்.

இந்த இடம் வந்த பின் அன்பர் அடையாளம் தெரியும்.

**உலகம் மறந்து போகும்.**

**அன்னையும் மறந்து போகும்.**

கழிசடையின் உயர்வை அறிவது கடைசி சித்தி.

இந்தக் கட்டுரைகளுக்கு அந்தப் பவர் உண்டு.

நாம் இம்மாதிரி எடுக்கும் முயற்சி எவருக்கும் தெரியக்கூடாது.

இது தெரியாமலிருக்குமா?

இரகஸ்யம் வெளியில் போனால் சக்தி power போய்விடும்.

கிருஷ்ண பரமாத்மாவின் தெய்வீக மனத்தைக் (overmind) கடந்த சத்தியஜீவியம் (Supermind power).

ஒரே ஒரு மெய் சொன்னால் இந்த பவர் உடலில் ஓடுவது தெரியும்.

30 நாள் ஒரு பொய் சொல்லாமலிருக்கக்கூடாதா?

பொய் சொல்வது பல வகை.

1) இருப்பதை இல்லை என்பது.
2) பொய் சொல்கிறோம் என்பதே தெரியாமல் (unconscious) இயல்பாகச் (automatic)ச் சொல்வது.
3) பொய்யை மெய்யாக நினைப்பது.
4) தன்னை உயர்வாக நினைப்பது.
5) தன்னை உயர்வாகப் பிறரிடம் கூறுவது.
6) அப்படிக் கூறப் பொய்யின் உதவியை நாடுவது.
7) பொய்யை ஒரு கருவியாக்குவது.
8) பொய்யை வாழ ஒரு உபாயமாகப் பரம்பரையாகப் பயன்படுத்துவது.
9) பொய்யே மெய் என ஜீவியத்தைத் தயார் (consciousnessஐ organise) செய்வது.
10) (Organised falsehood) - பொய்யை வாழும் வகையாக அமைத்துக் கொள்வது.
11) பொருளில் (Substanceஇல்) பொய்யாக இருப்பது.
12) (Spiritual falsehood) ஆன்மீகப் பொய் சொல்வது ஆசாரமானவர் உள்ள நிலை.
13) அவனும் நம்மிடம் தோற்பது.

✡ **ஜாதகம் எதிராகும்.**

ஜாதகம் பெரிய (science) சாஸ்திரம்.

பௌதீகம், ரசாயனம், கணிதம் (Physics, Chemistry, Mathematics) எல்லாம் ஜோஸ்யத்திற்கு நிகராகாது.

அடுத்த 1000 ஆண்டிற்கு நடக்கப் போவதை நாழி தவறாது சொல்லும்.

அன்னை சக்தி ஜாதகம் செய்ய முடியாததைச் செய்யும்.

அது பிரம்மாண்டமான சக்தி.

ஜோஸ்யன் ஏராளமாகப் பொய் சொல்வான்.

அதனால்தான் ஏழையாக இருக்கிறான்.

பொய் சொல்லாமலிருப்பதைவிட பொய் சொல்ல முடியாத நிலை பெரியது.

**பொய் உயிரோடிருப்பதற்கும் மெய் தேவை.**

அது (Supramental Truth). **சத்தியஜீவிய உண்மை.**

அது எந்தப் பொய்யையும் மெய்யாக மாற்ற வல்லது.

அன்னையைச் சத்திய உருவமாக நினைப்பது அதைத் தரும்.

எவரும் 100 பெரிய பொய் சொல்லியிருப்பார்கள்.

தகப்பனார் தாலுக்கா ஆபீஸ் கிளார்க் என்றால் டிபுடி கலெக்டர் என்று கூறுவதுண்டு.

ஒரு பரீட்சையில் ஒரு முறை ஒரு பேப்பரில் முதல் மார்க் வாங்கியிருந்தால் நான் பள்ளியில் முதலாக வந்தேன் (school first) என்பார்கள்.

அது போன்ற பொய்யை அன்னையிடம் மெய்யாக்குவது திருப்பம்.

**அடுத்தவரிடம் மெய்யாக்குவது அடுத்தது.**

பாதிக்கப்பட்டவரிடம் மெய்யாகக் கூறுவது பெரியது.

அது சத்திய சோதனை.

பொய் எக்காரணத்தை முன்னிட்டும் சொல்லாத இலட்சிய-முள்ளவர் பொதுவாகப் பொய்யின் அவதாரமாக மனதிலிருப்-பார் (personification of falsehood) எனத் தெரியாது. நாமெல்லாம் "நான் மது சாப்பிடமாட்டேன், சாப்பிடவேமாட்டேன்" எனக் கூறுவதில்லை. ஏற்கனவே மது உண்டவர், தற்போது அதைக் கைவிட்டவர் அப்படிப் பேசுவார். அவர் ஆழ்மனத்தில் மது இருப்பதை அவர் சொல் எடுத்துக் கூறும். பொய்யே சொல்லாதவர், பொய் சொல்ல முடியாதவர் ஒருவர் உண்டெனில் அவர் பொய்யைப் பற்றிப் பேசமாட்டார். பொய் சொல்லாத இலட்சியத்தை மேற்கொண்டவர் அமைதியாக அதைச் செயல்படுத்தலாம். அடிக்கடி, ''என்னால் பொய் சொல்ல முடியாது'' எனக் கூறலாம்.



பொய் கலக்காத சொல்லில்லை. பொய் கலக்காத செயலில்லை.

½ க்ஷணமானாலும் பொய்யில்லாத நேரம் எதிர்காலம் தெரியும்.

அது பலித்தால் 1 மணி நேரம் அந்நிலையை மனதில் நிறுத்தி கண்ணாடியில் பார்த்தால் பார்த்ததை நம்ப முடியாது.

ஒரு பொய் சொன்னவுடன் அதுவும் போய்விடும்.

**பொய் சொல்லக்கூடாது என்ற *முடிவு* உண்மையானால் அது வாழ்க்கையை நிலையாக நேராகத் திருப்பும்.**

எனது காவல்காரனும், அவன் மனைவியும் என் அனுபவத்தில் பெரிய அம்சம் உடையவர். அந்த அளவு சுபாவம் (personality) எனது பணக்கார நண்பருக்கும், குருவுக்குமில்லை.

அது சுபாவம், திறமையின் சுபாவம் (personality of truth – truth of work). இங்கே கூறுவது (personality of truth – truth of consciousness).

**பொய் அழிந்த மெய் அன்னை வாழும் அகம்.**

✡ **மனைவி.**

* கணவனுக்கு மனைவியே எல்லாம். அவளே அவனுக்கு முழுமையாகத் தித்திக்கும். கணவன் மட்டுமே அதைச் செய்யலாம் என்பது தத்துவம். அது மிகப்பெரிய இமாலய முயற்சி. மனைவி உள்ளபடி ஒத்துழைத்தால், ஆழத்தில் ஒற்றுமையிருந்தால், அவள் (good angel) தெய்வீக மனைவியாவாள்.
    * நினைப்பு தித்திக்கும்.
    * பயமும், பணிவும் நல்லது, ஆனால் அவை அன்புக்குத் தடை.

      அன்பால் ஏற்படும் பணிவு பண்பால் சிறந்தது.

      மனம் நல்லதாக இருக்க வேண்டும்.
    * வேண்டாததாக இருந்தால் கணவனுக்கு மனைவி

தித்திப்பது கணவனுக்கு மட்டும் உரியது.

ஒரு வேளை எதிர்காலத்தில் அது முடியும்.

தற்சமயம் ஒத்துழைப்பு தேவை.

சத்தியத்திற்கு அந்த பவர் உண்டு.

மனைவி சொல்லும் பொய்யும் கணவனுக்குத் தித்திக்க வேண்டும்.

ஒரு வேளை எதிர்காலத்தில் அதுவும் நடக்கும்.

நெஞ்சு இனித்து, நினைப்பு தித்திப்பது நிலைமையை மாற்றும்.

நீயே எல்லாம் என கணவன் மனைவியிடம் கூறும் பொழுது அவளை அவன் அப்படி மாறச் சொல்லக் கூடாது.

அவள் அவனுக்கு அப்படியாக வேண்டும்.

உன்னை மாறச் சொல்பவன் நண்பனில்லை.

நீ இருப்பது போல் உன்னை ஏற்பவனே நண்பன்.

✡ **கனவு.**

அடிமனம் காணும் கனவுகள் உண்மையானவை.

கனவால் அது நம் வாழ்வை வளர்க்கக்கூடியது.

ஆழ்மனக் கனவுகள் நரகம்.

அதிகாலைக் கனவுகள் பலிக்கும் என்பது உண்மை.

பகவான் இந்தியாவின் கனிப்பொருட் செல்வத்தைக் கனவில் கண்டார்.

கனவு நேராகப் பேசாது.

சுட்டிக் காட்டும், அது தலைகீழுமிருக்கும்.

மனிதனுக்குப் பிடிக்காதது அவன் கனவிலும் அனுமதிக்க மாட்டான்.



கனவு உண்மை என்கிறார் பகவான்.

ஒரு பிரச்சினை கனவில் கொஞ்சம் கொஞ்சமாக மாறுவது தெரியும்.

நம்மை விட்டுப் போனவை, உண்மையில் போகவில்லை எனக் கனவு காட்டும்.

நாம் மறந்தவை, நம் ஜீவன் மறக்கவில்லை என்பதைக் கனவு சொல்லும்.

பிறர் நினைப்பதைக் கனவு கூறும்.

கனவேயில்லாத தூக்கம் அடித்துப்போட்டாற் போன்ற தூக்கம். அல்லது ஆன்மா விழித்த தூக்கம் (unconscious sleep or spiritual sleep).

தூக்கத்தில் நாம் சச்சிதானந்தத்தைத் தொடுகிறோம்.

கனவு (subtle world) சூட்சும உலகுக்குரியது.

எதிர்காலத்தைக் காட்ட வல்லது கனவு.

கனவில் ஆசை பலருக்குத் தீரும். அனைவருக்கும் அது முடியாது.

கெட்ட சொப்பனம் வருவது நம் சுபாவம் தவறானது எனக் கூறும்.

(Wrongly formed personality).

கனவில் அன்னை வருவது சூட்சும தரிசனம்.

கனவில் அன்னையை அழைப்பது (subtle awareness) சூட்சும உலகில் தெளிவு.

கனவுலகம் தான் யார் என ஒருவருக்கு உணர்த்தும்.

கனவு படிப்படியாகத் தொடர்ந்து தொடர்கதையாக வருவ-துண்டு.

பயங்கரக் கனவு பிறர் மீது நமக்குள்ள கெட்ட எண்ணம்.

பிறர் கனவில் நம்மைத் தண்டிப்பது நாம் அவருக்குத் தண்டனை தர விரும்புவதைக் குறிக்கும்.

கனவில் குரு தீட்சை தருவதுண்டு.

தினமும் கனவில் தன் உடலை ஒரு அறையில் தூக்கிப் போடுவதைக் கபாலி சாஸ்திரி கண்டார். அது பகவான் அறை எனப் பிறகு தெரிய வந்தது.

எதற்கும் தொடர்பில்லாத கனவு ஏராளமாக வரும்.

தினமும் பகலில் நடப்பது இரவில் கனவாக வரும்.

படிப்பதும் கனவாக வரும்.

மிக நெருக்கமானவர் ஒரு பொழுதும் கனவில் வராமலிருப்ப-துண்டு.

கடந்த காலம், போன ஜென்மம், அடுத்த ஜென்மம் கனவில் வரும்.

கனவு ஒரு சாஸ்திரம்.

கனவை வாழ்க்கை வழிகாட்டியாக எடுத்துக்கொள்ள பயில முடியும்.

கனவில் பறந்தால் பெரிய ஆசை (ambition) இருப்பதாக அர்த்தம்.

யோகத்தில் அதுவே ஜீவியம் முன்னேறுகிறது (consciousness moves fast) எனப் பொருள்.

பல மணி நிகழ்ச்சிகள் சில வினாடிகளில் தெரியும்.

கனவற்ற தூக்கம் (dreamless sleep) என்பது ஒரு யோக சித்தி.

பகவான் இந்தியா ஜகத்குருவாகக் கனவு கண்டார்.

✡ **சாவித்திரி (14 line sonnet, 12 book Epic).**

*சாவித்திரி:* பகவான் பாண்டி வருமுன் எழுதியது.

14 வரி சானட் (sonnet) என எழுதினார்.

அது நாளாவட்டத்தில் இதிகாசமாக (epic) மாறி 12 புத்தகங்களாக 22,000 வரியில் 1950இல் முடிந்தது.



*எமன் ஒளிமயமான பின்னும் பழைய பேச்சைப் பேசுகிறான்.*

வாழ்நாள் முழுவதும் பகவான் எழுதிய நூல் *சாவித்திரி.*

*சாவித்திரியைப்* படிப்பதால் எந்த பிரச்சினையும் தீரும்.

முழுவதும் புரியாமற் படிப்பதே பெரியது, புரிந்து படிப்பது யோகம்.

அன்பர் *சாவித்திரியைப்* பற்றி *சாவித்திரிக்கு எழுதிய குறிப்புரை* என்று ஒரு புத்தகம் எழுதினார்.

அவர் பிசினஸ் விஷயத்தில் தகப்பனார் தொழில் அபிவிருத்தி-யானதைக் கண்டார்.

அதன் பிறகும் தகப்பனார் குணம் ருசியாக இருந்ததே தவிர அன்னை ருசிக்கவில்லை.

ஒருவர் புத்திமதி சொல்லி பொய்யை விட முடியாது.

தானே உணர்ந்து விடுவது அரிது.

அப்படி ஒருவர் விட்ட பின்னும், மீண்டும் பொய் ருசிக்கும்.

250 சீட் கேட்ட இந்திரா 356 பெற்ற பின்னும் தான் Motherஐ ஏற்கவில்லை.

ஆசிரமத்தைச் சோதனை (raid) செய்தார். அது ஆபத்து விளைவிக்கும்.

மெய் பலன் தருவதால் மனிதன் பொய்யை விடமாட்டான்.

என் தூக்கம் எங்கிருந்து வருகிறது எனத் தானே ஒருவர் கண்டு கொண்டார்.

அதனால் மாறுவாரா? மாறுவது (Grace) அருள்.

*சாவித்திரி* பொக்கிஷம்.

அதற்குப் பொய் சொல்லத் தெரியாது.

எப்பொழுது பிரித்துப் பார்த்தாலும் உண்மை பேசும்.

அப்படிப் பார்த்து பிரச்சினையைத் தீர்த்தவர் ஏராளம்.

ஒரு மாதம் மனம் நிதானப்பட்டு ஒரு நாள் காலையிலிருந்து *சாவித்திரி* நினைவாக இருந்து பயபக்தியாக, பவித்திரமாக, பொறுமையாக உட்கார்ந்து *சாவித்திரியைப்* பிரித்து கண்ணில்

படும் வரி "சத்தியம்" எனக் காணலாம்.

அதைவிட ஞானோதயமில்லை.

*அது நள்ளிரவில் சூரியோதயமாகும்.*

*அதை ஏற்பது வரம் வரப்பிரசாதமாவதாகும்.*

"உன் தாயார் எப்படியிருக்கிறார்?" என்ற (How is your mother?) கதையைச் சொல்லச் சொல்லி கேட்கலாம். அது யதார்த்தம்.

விரட்டக்கூடாது, மிரட்டக்கூடாது, அதட்டல் போடக்கூடாது, அன்பாக வேலையிட வேண்டும் என ஒரு செமினார் நடத்தினார்கள்.

அதை ஒரு நாள் முழுவதும் பயின்றவர் - foreman - மீண்டும் பழையபடி அதட்டல் போட்டார். ஆள் வேலை செய்யவில்லை. செமினார் (Seminar) நினைவு வந்தது. உடனே, "உன் தாயார் எப்படியிருக்கிறார்" (How is your mother) என மிரட்டும் குரலில் கேட்டார் என்பது கதை.

புதிய பழக்கம் வராது. வந்தால் பழைய பாணி போகாது என்று கூறுகிறது.

மூஷிகம் - எலி, எலியை மணந்த கதை - மூஷிகமாகவே இருக்கும்.

*உலகிலில்லாத பலன் பெற, உலகில்லாத பழக்கம் தேவை.*

*மனமாற்றம் என்பது கடினம்.*

*நளாயினி கூடையில் கொண்டு போன மனநிலையது.*

*அன்னைக்கு அது போதாது.*

*நளாயினி மனநிலை நமக்கு வருமா?*

பழைய முதலாளி எப்படியிருந்தாலும் ஒரு மாதச் சம்பளம் அனுப்பலாம் என அனுப்பினேன்.

என்னை மறந்துவிட்டார்.

36 வருஷமாக மகசூல் சூன்யமாயிற்று.

பழைய பலன் மாறவில்லை.



✡ **ஆர்வம் உயர்ந்தது. தாழ்ந்தவரில் அதுவே பேராசையாக மாறுகிறது.**

வருமானமேயில்லாத குடும்பம் பிள்ளையை டேராடூன் பள்ளியில் சேர்க்க முயல்வதைக் கற்பனை செய்தும் பார்க்க முடியவில்லை.

ஆனால் அது ஒருவர் விஷயத்தில் உண்மை.

அன்பர் ஒருவர் வரும்படியில்லாதபொழுது மகனை டேராடூனில் (Dehra Doon)இல் படிக்க வைக்க நினைத்தார். இந்த அன்பர் அளவு கடந்த புத்திசாலி.

இன்று அந்த அன்பருக்கு அன்னை விஷயங்களை முறையாக எடுத்துக் கூறினால் அவர்கள் வாழ்வில் அற்புதம் ஆயிரம் நிகழும்.

அதனால் அவர் மனம் மாறாது. மாறினால் அபூர்வம். ஒரு அன்பர் 100 கோடியை எட்டலாம் எனச் சொன்னது எட்டியவுடன் மறந்துவிட்டது. எட்டியபின் அன்னைக்குச் சேவை செய்யத் தோன்றவில்லை.

உண்மை அரிது.

இன்றுவரை அது மாறவில்லை.

**அதையும் கடந்து மனம் மாற இடம் உண்டு**.

அந்த இடத்தை இதுவரை எடுத்துக் கொண்டவரில்லை.

இனி வரலாம் எனக் காத்திருக்கிறேன்.

பொதுவாக அப்படி ஒரு மாற்றம் வர வேண்டுமானால், மாறியவர் வருவாரே தவிர பழைய மனிதர் மாறுவதில்லை.

இது போன்ற மாற்றங்களில் மனிதர்கள்,

* கண்டு கொள்ளமாட்டார்கள்.
* மாற்றம் பலன் தந்தால் பேசாமல் எடுத்துக் கொண்டு போவார்கள்.
* மெனக்கெட்டு, "உங்களால் வரவில்லை" எனக் கூறி விட்டுப் போவார்கள். "உங்கள் பார்ட்னருக்கு நன்றி (thanks) சொல்லுங்கள்" என்பார்கள். போர் முதலியார்

அதையும் செய்தார்.

* திரும்பி அழைத்தால் தூஷணை செய்வார்கள்.
* நல்லதை நாம் அவரை மறந்து அவர் சொல்லை மறந்து செய்தால் ''அங்கு வராத வழி செய்து கொண்டீர்கள்'' எனக் காரியம் முடிந்தபின் கூறுவார்கள்.
* அப்படிச் செய்தால் அவர்கள் விலகுவார்கள்.
* மாறிய பலன் நமக்கு வரும்.
* அவர்கள் பலன்பட நினைத்தால் இருவருக்கும் வாராது.
* **மாறாமல் பலன் வாராது**.
* பொய்யை விடுவது கடினம்.
* பொய்யின் ருசி பெரியது.

  பொய்யின் பலன் பெரியது என மனம் கூறும்.

  அது மாறி மெய்யை ஏற்பது சுலபம்.

  மெய்யின் பலன் பெரியது எனத் தெரிந்தால் பலன் வரும்.

  பலன் வரலாம், அதனால் மாறுவார் எனக் கூற முடியாது.
* ஒரு நிமிஷம் 'கண்' திறந்து பார்த்தால் சூழ்நிலை நம் நிலையை அப்பட்டமாகக் கூறும். அது தவறாது, தவறியதே-யில்லை.

✡ **அன்னை கூறியவற்றிற்கு ஆன்மீக அர்த்தம் யோக அறிவுக்குரிய அர்த்தமும் உண்டு. அதைக் காண வேண்டும்.**

* அன்னை ஒரு சூட்சும ஸ்தாபனம்.
* உலகை ஒரே நாளில் அற்புதமாக மாற்றக்கூடியவர்.
* 'பொய் சொல்லும் சந்தர்ப்பம் தரமாட்டேன்' என்று கூறுகிறார்.
* வியாதியை நாமே பிடித்துக் கொண்டிருக்கிறோம் -



தரித்திரம் ருசிக்கும்.

மேற்சொன்னவை பெரிய கருத்துகள்.

சக்தி (power) கருத்திலில்லை.

ஏற்கும் மனத்திலிருக்கிறது.

மனம் சக்தி powerஐ ஏற்கக்கூடியதானால், சக்தி (power) எந்தப் பக்கமிருந்தும் வரும். அம்மனம் (Mother's words) அன்னை சொற்களை ஏற்பது பெரியவை நடக்க உதவும்.

வேண்டுமா? என்பதே கேள்வி.

பொருள் வேண்டுமானால் ஒரு முறை கிடைக்கும்.

அருள் வேண்டும் எனில் பொருள் தொடர்ந்து கிடைக்கும்.

ரூ.100 மாத வருமானமில்லாத அன்பருக்கு ரூ.500/- பெரியது.

அது 1000மாயிற்று, 2000 ஆயிற்று. மேலும் பெருகி 3 அல்லது 4 ஆயிரத்தைத் தொட்டது.

அவர் முரட்டுத்தனமாக, கோபமாக மனம் புண்படும்படி பேசும் சந்தர்ப்பமேயில்லை. அவர் அப்படி நடந்து அனைத்தையும் இல்லையெனச் செய்து கொண்டார். அதுவே கடைசி. வறட்டு கௌரவம். இவர் போன்றவர்க்கு பணம் தரும் வசதியைவிட 'வேண்டாம்' எனக் கூறுவதில் சந்தோஷம் அதிகம். தொகை அதிகமானால் மறுக்கும் சந்தோஷம் அதிகம். அதை அறியாமையின் ருசி (Taste of ignorance) என்கிறார் பகவான். இரும்பு பிடித்த கை சும்மாயிருக்காது. வேண்டாம் எனச் சொல்வதில் சந்தோஷப்படும் சுபாவம் (personality) உள்ளவரை 'வேண்டாம்' முனைப்பாக இருக்கும். 5 வருஷம் கழித்து ஆப்பரேஷன் செய்து கொள்ளப் போவதாகவும் ''நான் உங்களைப் பணம் கேட்கவில்லை'' என 3 முறை எழுதியிருந்-தார். கேட்காதவர் ஏன் எழுத வேண்டும்?

ஏழை மக்களுக்கு உதவினால் அதிகாரப்பிச்சை கேட்கிறார்கள்.

குரு பெரிய பலன் பெற்றால் அவருக்குச் 'சேவை' செய்ய சந்தர்ப்பம் தருகிறார்.

அரசியல் தலைவர் பணத்தைப் பெற்றுக் கொண்டு மற்றவருக்கு நன்றி சொல்கிறார். இந்தத் தலைவருக்கு நான் கொடுத்த நன்கொடை ரூ. 500/- ஓராண்டு கழித்து அவர் கட்சி M.P. வந்தார். அவரை அழைத்துக் கொண்டு எனது பார்ட்னரை நன்கொடை கேட்க வந்தனர். பார்ட்னர் வீட்டிலில்லை. என்னுடனிருந்தார். அவரைத் தேடி என் வீட்டிற்கு வந்தவர்கட்கு 'அசடு' வழிந்தது. என்னை விலக்கி பார்ட்னரைத் தேடினார். என் வீட்டுக்கு வரும்படியாயிற்று.

M.P.க்கு என்னைத் தெரியும். பார்ட்னரைத் தெரியாது. பார்ட்னரைப் பணம் கேட்டனர். அவர் என்னைக் கேட்பதல்லவா முறை என்று கூறியது அவர்கட்கு அவமானமாயிற்று. M.P. என்னைப் பணம் கேட்டார். அது ரூ. 500/- இது போல் நம்பர் திரும்ப வரும், சொல் திரும்ப வரும், செயலும் மீண்டும் வரும்.

* செய்த செயல் "சொல்லாகவோ", "நம்பராகவோ", "அதே சந்தர்ப்பமாகவோ" வரத் தவறாது.

  பார்ட்னருக்கு 18 இலட்ச ரூபாய் சொத்தைவிட மனைவி மெச்ச வேண்டும்.
  எதிர்பார்க்கலாம், கணவனை மெச்ச மனைவிக்கு உயர்ந்த உள்ளம் தேவை.

✡ **We invite our enemies as our guests – *Savitri*.**
**நம் எதிரிகளை நாம் விருந்தாக வீட்டிற்கு அழைக்கிறோம் – சாவித்திரி.**

அப்படியானால் எல்லாருமே நமக்கு எதிரிகளாகும்.

*நமக்கு எதிரி நம் குணம்.*

ஒரு பக்கம் மனம் graceஐ அழைக்கும்பொழுது அடுத்த பக்கம் தீய சக்தி (hostile force)க்குரிய கதவை கை திறக்கும் என்று *The Mother*இல் சொல்கிறார்.

என்னை நான் கவனித்ததில் அதைத் தவறாமல் ஒவ்வொரு



பெரிய நேரத்திலும் செய்திருக்கிறேன். சுமார் 15 முறை அப்படிச் செய்திருக்கிறேன்.

அந்த இடத்தில் உஷாராக (alert) இருக்க இடைவிடாத நினைவு தேவை.

அடுத்த கட்டத்தில் அன்னை நம்மை நினைவு வைத்துக் காப்பது அருள் (grace).

அது போல் ஆபத்து விலகுகிறது.

சமூகத்தில் நண்பர், உறவினர் வருவதும், அது போல் நாம் பல இடங்கட்குப் போவதும் சகஜம். நான் கூறும் எச்சரிக்கை - *சாவித்திரி* கூறுவது - அவற்றிற்குப் பொருந்தாது.

அன்பருக்கு அவர் நிலையைவிட பல மடங்கு உயர்ந்த நிலை சந்தர்ப்பம் வரும். சாதாரண மனிதனுக்கு அது இல்லை. அந்த நேரம் நாம் எவரை உற்ற நண்பர் என நினைக்கிறோமோ அவர் நடைமுறையில் எதிரியாவார் என்பது சூட்சும ஞானம். *சாவித்திரி* அதைக் குறிப்பிடுகிறது.

தன் தொழிலில் ஒரு unitஇல் ரூ.500 சம்பாதிக்கும் இடத்தில் 8 லட்சம் சம்பாதிக்கும் வாய்ப்பு ஒரு அன்பருக்கு வந்தது. அவர்கள் கையில் அப்பொழுது அது போல் 120 units இருந்தன. வாழ்வில் இப்படி நடப்பதில்லை. அவர் முதற் காரியமாக தனக்கு உயிருக்கு உயிரான, பார்ட்னருக்கு அதைத் தர, பங்கிட்டுக் கொள்ள விரும்பி அவரிடம் கூறி மகிழ்ந்தார். இரண்டாண்டில் நடந்தவை, அந்த வாய்ப்பை இழந்தது ஆகியவற்றைக் காணும் பொழுது அதற்கு மூல காரணம், ஒரே காரணமாக இருந்தது இந்த நண்பர் எனத் தெரிய வந்தது.

*சாவித்திரி* இது போன்ற வாய்ப்பைத் தருகிறது.
இது போன்ற எச்சரிக்கையையும் தருகிறது.

இந்த நேரம் அந்த எச்சரிக்கையின்படி நடக்க மனிதன் கற்க வேண்டும்.

அதுவே குறைந்தபட்ச தகுதி.

அதைப் பக்குவம், நேரம் என்கிறோம். அது வருமா?

நமக்கு அத்தகுதியை நாமே தர முடியுமா?

அது உண்மை, விழிப்பு, உஷார் (It is Sincerity, receptivity, opening and alertness) – பொதுவாக அருள் (grace).

வாய்ப்பு தவறினால் மீண்டும் வாராது.

சிறப்பான அன்பர்கட்கு வாய்ப்பு மீண்டும் வரும், மீண்டும் மீண்டும் வரும்.

ஒரு முறை அறியாமையால் இழக்கலாம்.

அடுத்த முறை அன்பர் விழிப்பாக இருப்பாரா?

**அன்பர்கள் அம்முடிவை எடுத்து நிறைவேற்றினால் பெரும் செல்வம் பெற முடியும்.**

**அருள், பேரருள், ஆன்மீக அருள், சத்தியஜீவிய அருள்** (Grace, Supergrace, Spiritual grace, Supramental grace)ஐ அழைத்தாலும் மனம் பழைய பாணியை ரசித்து ருசிப்பது அறியாமையின் ருசி, தரித்திரம் (Taste of ignorance, ill-luck).

“நேரத்திற்குத் தகுந்த புத்தி கொடுப்பது”.

அன்னை இவற்றின் பின்னிருக்கிறார் (Behind all there is Mother) - அது என் கண்ணுக்குத் தெரிய வேண்டும். மனம் அதை நாடுவது, அதை மட்டும் நாடுவது அருள் (grace).

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆரம்ப உருவில் அன்னையை அறிய முடியாதவர் அவை ஆபத்து, விபத்து, அழிவுகளாக மாறும்வரைக் காத்திருக்க வேண்டும்.

***அன்னையைக் காண மறுத்தால் ரூபம் கோரமாகும்.***





## P.120 In dream and trance and muse before our eyes,

### சமாதி, கனவு, சரஸ்வதியில் நம் கண்முன்

- ☆ அகக்கண்ணின் சூட்சும லோகத்தினூடே,
- ☆ பொங்கிவரும் பூரிப்பு காட்சிகள் பார்வையினின்று பறந்தன,
- ☆ இலட்சிய ராஜ்ய ரூபங்கள் கடந்தன
- ☆ நினைவில் நிழலிடும் பளிங்கு நிகழ்ச்சிகள் நின்றன.
- ☆ சொர்க்கமும் மோட்சமும் காலத்தைக் கடந்த உலகங்கள் கற்பனையில் எழுந்து,
- ☆ கனவுணர்வில் கருத்தையும் நெஞ்சின் ஆழத்தையும் தொட்டன;
- ☆ இல்லையெனத் தோன்றும் பெருஉண்மைகள்,
- ☆ மகிழ்ச்சியைக் கடந்த சந்தோஷம் உண்மையைக் கடந்த சந்தோஷம்,
- ☆ இவை கற்பனையா, கனவா,
- ☆ புவிவாழ்வின் சத்தியம் கனவின் உண்மையால் பொய்த்தது.
- ☆ விரைந்த சச்சிதானந்த அசைவு அங்கு நின்று நிலைபெற்றது
- ☆ எங்கும் பார்வை அழைத்ததின் பேரில் திரும்பி வந்தன
- ☆ அமைதியான மோட்சம், அழியாத ஜோதி,
- ☆ நீல அமைதியின் ஒளிமயமான கண்டங்கள்,
- ☆ ஆண்டவனின் ஆர்ப்பாட்ட குதூகலம் கடலென்ற நதியாயிற்று,
- ☆ ஊதா சூரியனின் கவலையற்ற நாடுகள்.

☆ பிரகாசமான எண்ணம் மூலையில் என்றோ ஒதுங்கிய நட்சத்திரம்

☆ கற்பனை வால் நட்சத்திரம் கண்ட கனவு,

☆ சத்தியம் கட்டான ரூபம் பெற நகர்ந்தது.

☆ கனவின் உண்மை, புவியின் சத்தியம் இணைந்தன,

☆ வாழ்வின் அற்புத லோகங்கள் இனியும் கனவல்ல;

☆ திரை விலகி அவன் திருஷ்டி பலித்தது:

☆ காட்சியும் நிகழ்ச்சியும் கண்ணையும் நெஞ்சையும் தொட்டன

☆ மிருதுவான இதம் ஆனந்தமாகக் கடித்தது.

☆ அளவுகடந்து அகன்ற சிகரம் அவன் பார்வையை இழுத்தது

☆ பிரம்மத்தின் வானில் குறுக்கிட்ட அதன் எல்லை

☆ வினோத வையக ஆழம் கவர்ந்திழுத்தது.

☆ வாழ்வின் பிரம்மானந்தம் சாரத்தின் ரஸமாயிற்று.

☆ ஆன்மீக சிகரம் அளவற்ற புதிராயிற்று

☆ அதிசயம் செய்யும் அற்புத மாற்றத்தின் போக்கு

☆ ரூபமற்ற அனந்தம் பிளவுபட்ட வாழ்வினின்று விலகியது

☆ காலத்தைக் கடந்த நிலை காலத்திற்களித்த அபயம்.

☆ காலம் ரூபமற்ற பொருளினின்று முத்திரையிட்ட நாணயம்;

☆ பிரம்மத்தின் அசைவற்ற அமைதி பெற்ற பிரபஞ்ச வாழ்வு:

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**விஷயத்தை நாடுபவன், தோற்றத்தைப் போற்றுபவனை திருப்திப்படுத்த முயன்றால் காரியம் கெடும்.**



# நற்றிணையில் ஒரு நற்செய்தி

M. மணிவேல்

சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழரின் பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், நெறியான வாழ்க்கை முறையைப் பற்றி விவரிக்கின்றன. தலைவனும் தலைவியும் மணம் முடிப்பதற்கு முன் கூடிப் பழகுவர். இதனை ''களவொழுக்கம்'' என்பர். தலைவி தான் விரும்பும் தலைவனை, தான் விரும்பியவாறு மணம் முடித்துக் கற்பொழுக்கத்தில் இல்லற வாழ்வில் இணைந்து ஈடுபடுதல் என்பது ''அறத்தொடு நிற்றல்'' என்பர்.

பொருள் செல்வத்தை நாடி காதலன் பொருளீட்ட வெளியூர்ச் செல்வான். பொருள் வழியிற் பிரிந்து செல்வதற்குக் காதலியைப் பிரிதல் என்பது இயற்கை. அப்படி ஒரு தலைவன் (மலைநாடன்) தலைவியைப் பிரிந்து இருக்கிறான். பொருள் ஈட்டப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த நாளில் வருவதாகச் சொன்னபடி வராததினால் தலைவி பெரிதும் வருந்தினாள். பிரிவாற்றாமையால் தலைவனை எண்ணி ஆற்றாத் துயரத்தில் ஆழ்கிறாள் தலைவி. அவளது அழகிய கண்கள் ஒளி மங்கின. வளையல்கள் நெகிழ்ந்தன. ஒளி பொருந்திய நெற்றி பசலையுற்றது.

குறித்த காலத்தில் வராதிருந்த தலைவனை எண்ணி, நெஞ்சம் வருந்திய தலைமகளுக்கு, அவளது தோழி ஆறுதல் கூறும் வகையில், தலைவி மகிழும் வண்ணம் தான் அறிந்த ஒரு நற்செய்தியைக் கூறுகிறாள். அந்த நற்செய்தியில் பொதிந்துள்ள ஆன்மீக விழிப்புணர்வைப் பற்றிய ஒரு மறைமுகமான குறிப்பினை நற்றிணையில் காண முடிகிறது.

நலிவுற்ற தலைவியை நோக்கிக் கூறும் தோழியின் கூற்று: ''என் அன்புத் தலைவியே! நான் சொல்வதைக் கேள். நம் மலை நாட்டில் காட்டாறு ஓடுகிறது. பாயும் நீரில் பாசி எங்கும் பரவியிருக்கும். கரையைக் கரைத்து செல்லும் வெள்ள நீர், பாசியை அங்குமிங்கும் அலைக்கும். வெண்மையான அருவி நீர் பாயும்

நீர்த்துறையிடத்தே யானை, புலியோடு சண்டையிட்டது. சண்டையிட்டதில் யானை புண்பட்டது. புண்பட்ட யானையின் தந்தத்தைக் கவர விரும்பிய வேடுவர், வில்லில் அம்பைத் தொடுத்தனர். அம்பு பட்டதால் யானை பிளிறிற்று. அந்த ஒலி காட்டில் இடி முழக்கம் போல் கேட்டது. அவ்வாறு ஒலிக்கும் மலையை உடைய நம் தலைவன் இப்பொழுதே வருவான் என்று நம் அடுத்த வீட்டுப் பெண் ஒருத்தி மற்றொருத்தியுடன் பேசும்போது கூறினாள். அந்தச் சொற்கள் இனிமையாக இருந்தன. அயலாள் ஒருத்தி தற்செயலாகக் கூறிய சொற்கள் நமக்கு நன்னிமித்தமாகத் தோன்றிற்று. அதனால் நம் பெருமலைநாடன் இப்பொழுதே வருவான் என்று நான் கருதுகிறேன்'' என்றாள். ''அமுதமான வார்த்தைகளைச் சொன்ன அடுத்த வீட்டுப் பெண் அமுதத்தை உண்டு இன்புற்று வாழ்வாளாக'' என்று தோழி வாழ்த்துகிறாள். நல்ல சகுனமான வார்த்தையை மொழிந்த நற்செய்திக்கு, நன்றியினைத் தெரிவிக்கும் வகையில், அடுத்த வீட்டுப் பெண்ணை வாழ்த்தியது, தோழியின் நற்பண்பினைக் காட்டுவதாக, நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது.

நற்றிணையில் வரும், இக்காட்சியில் இடம் பெற்றுள்ள ஒரு நற்செய்தியைப் போல், ''ஆன்மீகமும் ஐஸ்வர்யமும் பாகம் Iல், கட்டுரை வரிசை எண் 31ல்'' ஒரு விளக்கம் உள்ளது. அந்த விளக்கத்தை ஒப்பு நோக்குகையில், அந்தக் காலத்து தமிழ் மக்களிடத்தில் ஆன்மீக விழிப்புணர்வு ஏற்பட்டிருந்தது என்று தெரிகிறது. அயல்வீட்டுப் பெண்ணின் வாயினின்றும் வெளிப்பட்ட சொல் ''நம் தலைவன் வருவான்'' என்ற நற்செய்தி அடுத்து நிகழவிருக்கும் நிகழ்ச்சியை முன்கூட்டியே அறிந்து அறிவித்தாற் போன்று அமைந்துள்ளதால், அக்காலத்து தமிழ் மக்கள் ஆன்மீக விழிப்புணர்வு பெற்றவர்களாக இருந்தார்கள் என்பதனை யூகிக்கலாம்.

''ஆன்மீகமும் ஐஸ்வர்யமும்'' கட்டுரையில் வரும் ஒரு கருத்து: ''ஆன்ம விழிப்பு உணர்வு உள்ளவர்களுக்கு, அவர்கள் காண்பது மற்றும் கேட்பது யாவும் சகுனங்களாக அமையும். நாம் வீட்டை விட்டுக் கிளம்பும்போது தெருவில் யாராவது ஒருவர் மற்றவரிடம் பேசும்போது ''இன்று உனக்கு அதிர்ஷ்டம்'' என்ற சொல் காதில் விழும்போது அது நமக்கு நல்ல சகுனமாகும்''.



நற்றிணையில் அதுபோல் அடுத்த வீட்டுப் பெண் ஒருத்தி மற்றொருத்தியுடன் பேசும்போது உரைத்த **நல்வாக்கு**, தோழிக்கு **நல்ல சகுனமாகத்** தோன்றிற்று.

ஆன்மீக விழிப்புணர்வு உள்ளவர்கள், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை முன்கூட்டியே நன்னிமித்தமாக (சகுனமாக) உணர்வார்கள் என்ற சிறந்த கருத்தினை, ''ஆன்மீகமும் ஐஸ்வர்யமும்'' கட்டுரையில் இடம்பெற்றுள்ள கருத்தும் மற்றும் நற்றிணையில் கண்டுள்ள நற்செய்தியும் நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இந்த விளக்கங்கள் அமைந்துள்ளன.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**வாழ்வின் சிறுமையை நிந்திப்பதும், பெருமையைப் போற்றுவதும் நாம் பழைய வாழ்வை விட்டகலவில்லை என அறிவிக்கும்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நமது சிறிய - பெரிய பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கப் பயன்படும் சக்தி, யோகத்தில் ஒரு செயலைப் பூர்த்தி செய்யத் தேவை.

***அர்ப்பணமாக எழும் அசைவு யோக சாதனை.***

## Disciples never understood the Master
## சிஷ்யர்கட்கு குரு புரிவதில்லை

நாலு பேர் உள்ள இடத்தில் அதிகாரமில்லாத நேரமானால், ஆர்வமான செய்தி எதுவுமில்லாவிட்டால் அவரவர் தங்கள் எண்ணத்திலேயே திளைத்திருப்பார்கள்.

அதுவும் சிந்திப்பவர் சிந்தனையில் மூழ்கியிருப்பார்கள். காதல் மையலில் உள்ளவர்க்குக் கண்டதெல்லாம் காதலுக்குரியவராகத் தெரியும்.

மேரி என்ற பெண் அனாதை. திருமணமாகாத ஏழைத் தாயாரை ஒரு பிரபு திருமணம் செய்வதாகப் பொய் உறுதியளித்து, போதை கொடுத்து கர்ப்பவதியாக்கிவிட்டார். பெண்ணின் அண்ணன் விஷயமறிந்து அளவு கடந்து குடித்துவிட்டு பிரபுவைத் தேடி வந்து தடியால் அடித்துக் கொலை செய்தார். கொலை செய்தவன் ஜெயிலுக்குப் போனான். பெண்ணுக்குப் பெண் பிறந்தது. பெண் பேரழகி. மேலும் பவித்திரமான புனிதவதி. அவளை விரும்பிய ஒருவன் இந்த நிலையிலும் அவளிடம் வந்து, அவளை மணந்து அமெரிக்காவுக்கு அழைத்துப் போவதாகக் கூறினான். ஆனால் அவள் கைக்குழந்தையை ஏற்கத் தயாரில்லை. பிரபுவின் சகோதரன் டாக்டர். நடந்தது தெரியுமாதலால், கொலை செய்தவன் நேர்மையை ஏற்று அவன் சார்பாக வழக்காடினார். அவர் மென்மை நிறைந்த சத்தியவான். டாக்டர், பெண் நிலையறிந்து அவளிடம் வந்து குழந்தையைத் தான் காப்பாற்றுவதாகவும், அதற்காகத் திருமணம் செய்யாமலிருப்பதாகவும் உறுதி கூறினார். பெண் இலண்டனில் பள்ளியில் வளர்ந்தாள். கொலை செய்தவன் விடுதலையாகி உழைப்பால் உயர்ந்து பெரும் சொத்து பெற்று, பெற்ற செல்வத்தை மேரிக்கு உயில் மூலமாக அளித்து, அந்த சொத்துக்கு டாக்டரை டிரஸ்டியாக நியமித்தான்.



மேரிக்குத் தகப்பனார் இறந்த விவரம், மாமா யார், எப்படி சம்பாதித்தார் எதுவுமறியாமல் இலண்டனில் வளர்ந்து நாகரிகமான பெண்ணாக வந்து சேர்ந்தாள். உள்ளூர் பிரபு மகன் பிரான்க். பிரபுவுக்குப் பெரும் சொத்து. கடன் அதைவிடப் பெரியது. மேரி அந்த வீட்டில் டாக்டரால் பல ஆண்டு பிரபுவின் பெண்களுடன் வாழ்ந்தவள். பிரான்க் மேரி மீது ஆசைப்பட்டதால் பிரான்க் தாயார் மேரியை வீட்டிலிருந்து விலக்கினார். மேரி சோகமானாள். பிரான்க் பிடிவாதமாக இருக்கிறான். அவள் தாயார் கோபமாக இருக்கிறாள். டாக்டருக்கு உயில் விஷயம் தெரியுமாதலால் பணம் மேரிக்கு வந்தால், கோபம் மறையும், திருமணம் நடக்கும் என அறிவார். அவரால் பேச முடியவில்லை.

நேரம் வந்தது. சொத்து மேரிக்கு வந்துவிட்டது. சம்பந்தப்பட்ட எவருக்கும் மேரிக்குச் சொத்து போகும் என நினைக்கவும் முடியவில்லை. சட்டப்படி விஷயங்கள் பூர்த்தியானபொழுது டாக்டர் மேரியிடம் வந்தார். மேரிக்கு இப்பெரிய சொத்துக்குரியவரைத் தெரியும். பெண்ணுக்கு அதிர்ச்சி தரக்கூடாது என டாக்டர் பேச்சைப் பக்குவமாக எழுப்புகிறார்.

டாக்டர்*:* மேரி, செல்வந்தர் உயில் வெளிவந்துவிட்டது. இந்தச் சொத்து யாருக்குப் போகிறது என உன்னால் நினைக்க முடியுமா*?*

மேரிக்குத் தனக்கு வரும் என நினைக்க முடியாது. இறந்தவரைப் பற்றிப் பொதுவாகத் தெரியுமே தவிர அவர் உறவு தெரியாது. எதுவும் தெரியாது. சற்றும் யோசிக்காமல்

மேரி*:* பிரான்க்குக்குப் போகிறது,

என்றாள். சொத்து பெரியது. அவளுக்குச் சம்பந்தமில்லாதது. நினைக்க விவரம் தெரியாதவள். அவள் திகைப்பது சரி. அவள் மனம் பிரான்க்கால் நிரம்பியிருக்கிறது. எதையும் பிரான்க்குடன் சேர்த்தே பார்க்க முடியும். அதனால் அப்படிக் கூறினாள்.

***இது மனம் செயல்படும் வகை.***
***இருவர் பேசும்பொழுது இருவர் மனமும் தங்கள் காரியங்களையே நினைத்துக் கொண்டிருக்கும்.***

ரங்கநாதன் என்று ஒருவர் கூறினால் அவர் தன் தம்பியைப் பற்றிப் பேசுவார். கேட்பவர் அவர் நண்பன் ரங்கநாதனை நினைத்துக் கொண்டிருப்பார். ஒருவர் கவனத்தை ஈர்த்து நாம் கூறுவதைக் கேட்கச் செய்வது எளிய காரியமில்லை.

- ✧ குருவை அறிந்த சிஷ்யனுமில்லை.
- ✧ சிஷ்யனை அறிந்த குருவில்லை.

பகவானை பலரும் ரிஷி என்றனர். வேறு சிலர் அவதாரம் என்றனர். ராம அவதாரம் மனித சுபாவத்திற்குட்பட்டு சீதையை சந்தேகப்பட்டது. போர்க்களத்தில் ஆயுதம் தாங்கிப் போரிட்டது. போர்க்களம் போகாமல் போரை வெல்ல அவதாரத்தால் முடியுமா? ரிஷியால் முடியுமா? விஸ்வாமித்திரர் அசுரரிடமிருந்து தன்னைப் பாதுகாக்க ராமனை அழைத்துச் சென்றார். பகவான் ரிஷியில்லை, அவதாரமில்லை எனில் வேறென்ன? இதுவரை நாம் சிந்தித்தோமா?

✧ ***குருவை அறியும் சிஷ்யன் குருவுக்குச் சமமானவன்.***

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

5 வருஷத்தில் முடியாததை முடிக்க முயலும் திட்டத்தை 5 வாரத்தில் முடிக்க, ஆழத்தைத் தொடும் சமர்ப்பணம் உதவும்.

***ஆழ்ந்த சமர்ப்பணம் வருஷத்தை நாளாக்கும்.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 42. எதிர்பார்க்காத மனம்.

மனிதனுக்குக் கட்டுப்படாதவை ஏராளம். மனத்திற்குக் கட்டுப்படாதவை மனிதனுக்கும் கட்டுப்படாது. கட்டுப்படுவது என்றால் என்ன? எவை கட்டுப்படா?

ஆசை, ஆர்வம், பயம், எதிர்பார்ப்பது, அவசரம் போன்றவை நமக்குக் கட்டுப்படா.

நாலு பேர் பேசும்பொழுது அந்த விஷயம் நமக்குத் தெரியும் என்றால், நம்மை எவரும் அழைக்காவிட்டாலும், நாமே முனைந்து பேசத் தோன்றும்.

- ✧ அனைவரும் நம் போன்றவரானால் பேச்சுக் கட்டுப்பாட்டி-லிருக்காது.
- ✧ அனைவரும் நமக்கு உட்பட்டவரானால் பேச்சைக் கட்டுப்-படுத்தவே முடியாது.
- ✧ அதாவது முடியும் என்பதைச் செய்யாமலிருக்க முடியாது.

மனைவியோ கணவனோ ஊருக்குப் போனவர் 10 மணிக்கு வருவாரெனில் அதற்கு முன்பே மனம் இடைவிடாது எதிர்பார்க்கும்.

***அம்மனநிலை மனிதனுக்குக் கட்டுப்படாது.***

ஏன் அப்படி எதிர்பார்ப்பு எழுகிறது?

நமக்குப் பாசம், பற்று அதிகம் அதனால் எதிர்பார்க்கிறோம் என்பது நம் மனநிலை.

***பாசமும் பற்றும் பூரணப்படாத நிலையில் மனம் எதிர்பார்க்கும் என்பது ஆன்மீக உண்மை.***

பரீட்சை எழுதினால் ரிஸல்ட் எதிர்பார்க்கிறோம், கேஸ் நடத்தினால் தீர்ப்பை எதிர்பார்க்கிறோம். அப்படி எதிர்பார்ப்பவை ஏராளம்.

- பரீட்சையென முதல் வகுப்பு முதல் M.A.வரை 20 அல்லது 25 பரீட்சை எழுதியிருந்தாலும் ரிஸல்ட் எதிர்பார்க்கும் பழக்கமில்லாதவருண்டு. ஏனெனில்

  ***பாஸாகுமா என்ற கேள்வி அவர் மனத்தில் இல்லை.***
  ***விஷயம் குறைவானால் மனம் எதிர்பார்க்கும்.***
  ***எதிர்பார்ப்பது மனத்தின் பலஹீனத்தைக் காட்டும்.***

- எலக்ஷனில் யார் நின்றால் நிச்சயமாக வெற்றி பெறுவார் என அனைவரும் அறிவார்களோ அவருக்கு அந்த நினைவு இருப்பதில்லை.
- ஒரு பெரிய சொத்து சுவீகாரமாக பலரும் எதிர்பார்க்கும் நிலையில் எவருக்குப் போகப்போகிறதோ அதை அனைவரும் அறிவார்கள். அவர் மனத்தில் அந்த நினைவு இல்லாமலிருப்பதுண்டு.
  - இது போன்ற நபர்கட்கு மற்றவர் போல் எதிர்பார்ப்பு எழுவதில்லை.
  - இவர்கட்கு வேறு விஷயத்தில் எதிர்பார்ப்பு எழும். அது எளிதில் கட்டுப்படாது.
  - **இம்மன நிலையுள்ளவர்க்கு பூரண யோகம் செய்யும் தகுதியுண்டு**.
  - அனைவரும் விரும்பும் பெண் தன்னை விரும்புகிறாள் என்பதை அவளுடன் பழகியும் அறிந்து கொள்ள முடியாத மனநிலையிது.

ஆசை எழாத நெஞ்சம், பயம் நுழையாத உயிர், அவசரப்பட முடியாத பொறுமை, எதிர்பார்க்காத மனநிலை பகவான் ஸ்ரீ அரவிந்தருக்குரியது.

***அவர்கட்கு யோகம் பலிக்கும்.***



**எதிர்பார்ப்பது என்றால் என்ன?**

*The Mother* என்ற நூலில் நாம் விலக்க வேண்டியவற்றுள் ஆசை, அதிகாரம் desire, demand என்ற இரு குணங்களைக் குறிப்பிடுகிறார். அதிகாரம் என்பது தனக்கு உரிமையற்றதை, ஆசை காரணமாகக் கேட்பது.

- எதிர்வீட்டுக்காரன் அவன் கடனை நம்மை அடைக்கச் சொல்லிக் கேட்பது.
- நமக்கு அறிமுகமற்றவர், நம் வீட்டு விசேஷத்திற்குத் தன்னை அழைக்க வேண்டுமென வற்புறுத்துவது.
- நாம் கடையில் ஒரு பொருள் வாங்கப் போனால், கடைக்காரன் வேறொரு பொருளை வாங்கும்படிச் சொல்வது.
- நமக்குத் தொடர்பில்லாதவர், அவர் மகனுக்கு அட்மிஷன் வாங்கித் தரும்படி கேட்பது.
- மைத்துனன் தன் பெண்ணுக்கு நம்மைத் திருமணம் செய்யச் சொல்வது.
- எந்தக் காரணமுமின்றி சலுகை பெற அதிகாரமாக, உரிமையாகக் கேட்பது சமூகம் அறிந்தது.
- ஏதாவது ஒரு காரணம் கற்பித்துக் கொண்டு அது போல் கேட்பது.
- "எங்கள் தெருவில் நீங்கள் குடியிருப்பதால், எனக்கு இந்த உதவி செய்ய வேண்டும்" என்பது.
- உதவி செய்யாவிட்டால், உபத்திரவம் செய்வேன் எனப் பயமுறுத்துவது.
- "நான் லைன்மேன், உங்கள் வீட்டு விருந்திற்கு என்னை அழைக்காவிட்டால் விசேஷத்தின்போது கரண்ட் நின்றுவிடும்" என்பது.

  சமூகத்தில் நாம் திறம்படச் செயல்பட வேண்டுமானால், இப்படிப்பட்ட கோரிக்கை, பயமுறுத்தல் எழக்கூடாது.

லைன்மேன், நம் வீட்டு விசேஷத்தின்பொழுது கரண்ட் எக்காரணத்தாலாவது நின்றுவிட்டால், தன்னைச் சந்தேகப்படுவார்கள் எனப் பயந்து வேலை செய்வது நாம் செயல்பட அவசியம்.

**இங்கெல்லாம் சட்டம் செல்லுபடியாகாது. லைன்மேன் அடி விழும் எனப் பயப்பட்டால் பயமுறுத்தமாட்டான்.** ரௌடியின் பலமில்லாமல் சமூகத்தில் திறம்பட வாழ முடியாது.

- அதிகாரம் செய்யாதவனுக்கு ஆசையிருக்கும்.
- ஆசைப்படக்கூடாது என நினைப்பவனுக்கு எதிர்பார்ப்பிருக்கும்.
- **ஒருவன் நம்மை உரிமையில்லாமல் அதிகாரமாக உதவி கேட்கிறான் எனில் நம் மனத்தில் எதிர்பார்ப்பிருக்கிறது எனப் பொருள்.**

எதிர்பார்ப்பை மனத்தை விட்டு அகற்ற, அது சொல்லாக மாறுவதைத் தடுக்க வேண்டும். அதாவது உள்ளே சொல் எழக்கூடாது.

- சொல் உள்ளே எழுந்தால் உரிமையற்றவற்றை அதிகாரமாகக் கேட்கும் குணம் நம்முடையது எனப் பொருள்.
- மௌனம் சொல்லைக் கடந்து மனத்தை ஆட்கொண்டால் நமக்கு நாகரிகம் (good manners) வந்ததாகக் கொள்ளலாம்.
- அதற்குப் பக்குவம் எனப் பெயர்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**அப்படித் திருப்திப்படுத்திவிட்டால், முயற்சி முழுமையாக வீணாகும்.**



# அன்பர் கடிதம்

அன்புள்ள அன்னை அவர்களுக்கு,

உங்கள் அன்பு பக்தை ரா. ஸ்ரீவித்யாவின் கடிதம். இக்கடிதத்தை அன்பு அன்னைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அமைத்துகொள்கிறேன். தாயே! நான் கேட்டபடி Seethalakshmi Ramaswamy Collegeலேயே எனக்கு M.Phil. கிடைத்துள்ளது. 14.7.2010 அன்று Entrance மற்றும் Interviewவை நல்லபடியாக உங்கள் அருளால் செய்ய முடிந்தது. அன்று மதியமே உடனடியாக எனக்கு Admission போட வேண்டும் என்று HOD கூறிவிட்டார். மொத்தம் 8 பேர் வந்திருந்தனர். எனக்கு மிகவும் பயம் வந்துவிட்டது. எது நடந்தாலும் பரவாயில்லை என்று அன்னையின் மேல் என் பாரத்தை இறக்கிவிட்டுச் சென்றேன். என்ன ஆச்சர்யம், 8 பேரில் 2 பேர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டு அன்றே Admission முடிந்துவிட்டது.

அன்னையின் கருணையை என்னவென்று சொல்வது. தாயே! கடந்த 2 மாதங்களாக மிகவும் குழப்பத்தில் இருந்தேன். குழப்பத்திற்கெல்லாம் விடையை காட்டிவிட்டீர்கள். மீண்டும் ஒரு முறை உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் M.Phil.ஐ மிகவும் சிறப்பாகச் செய்ய உங்கள் அருளை வேண்டுகிறேன் தாயே! அனைத்தினையும் நன்றாக நடத்தி வையுங்கள் தாயே!

*-- ஸ்ரீ வித்யா, மண்ணச்சநல்லூர்*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**பொறுக்க முடியாததைக் கண்டு துடிக்காதது, பாரபட்சம்.**

# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/8) எண்ணம் - சிந்தனை - திருஷ்டி - ஞானம் - சத்தியஜீவியம் - ஜீவியம் - சத்தியம் - பிரம்மம் என்பது அடுத்தடுத்த உயர் நிலைகள்.**

**மனிதன், அறிவு, உணர்வின் அனுபவம் - உடலின் திறன் - ஜடத்தின் ஐக்கிய ஞானம் அறியாமை தன்னை அறிவாகக் காண்பது - எல்லாம் உணர்ந்த ஜடம் என்பது அடுத்த வகையில் சொல்லப்படுவது.**

**அவை சந்திக்குமிடத்தில் ஆன்மீகப் பரிணாமம் ஆரம்பிக்கிறது.**

- **பரிணாமமும் சிருஷ்டியும் சந்தித்தால் வளராத ஆன்மா வளர ஆரம்பிக்கும்.**

☆ வாழ்க்கை (routine) இயல்பாக ஓடும் வரை அனுபவம் வாராது. அறிவு வளராது.

☆ இக்கட்டான நிலை எழுந்தால் செய்வதறியாது திகைத்து தெளிவு ஏற்படுவது அனுபவம்.

☆ அது அனுபவம் தரும் அறிவு.

☆ எளிய மனிதனுக்கு ஆண்டுக்கு ஒரு முறை அப்படிப்பட்ட நிகழ்ச்சி வரும்.

☆ ஒரு முதலாளியிடம் 100 பேர் வேலை செய்தால் தினசரி ஒரு பிரச்சினை எழும். கோர்ட்டிற்குப் போக வேண்டி வரும், பல ஆபீஸ்களில் ஆர்டர் பெற வேண்டும், பொதுமக்களுடன் உறவு எழுந்தபடியிருக்கும், அவருக்குத் தொடர்பற்றவரும் வந்து பிரச்சனைகளை எழுப்புவர். ஒரு நாளைக்குப் பல பிரச்சினைகள் எழும். சில நாள் முழுவதும் பிரச்சினையாகவே இருக்கும். சமாளிக்க முடியாதவர் தொழிலை இழப்பார். சமாளிப்பவர் அனுபவம் பெறுவார். அந்த அனுபவம் அறிவுக்குரியது, அடுத்த உயர்ந்த கட்டத்தில் உணர்வுக்குரியது, முடிவான கட்டத்தில் உடலின் செயலுக்குரியது.

☆ மனிதன் அறிவால் செயல்படுகிறான்.

☆ ஆத்மா - சாட்சி புருஷன் - வெளிப்பட்டால் அவன் மகானாவான்.

☆ சாட்சி புருஷன் வெளிப்பட்டுக் குடும்பத்திலிருந்தால் தலைவனாவான்.

☆ நம் கோபத்தைக் கிளறும் நிகழ்ச்சியில் நிதானமிருக்காது. அதை வெல்வது திறமை, தலைமை. அது உணர்வுக்குரிய செயல்.

☆ பெரிய மனிதர் பலர் உள்ள இடத்தில் நம்மை அபிப்பிராயம் கேட்டால் யோசனை செய்ய முடியாமல் பேசிச் சிக்கலில் மாட்டிக் கொள்கிறோம். அது உடலின் செயல்.

☆ அங்கு நிதானம் உள்ளவன் பெரும் தலைவனாவான்.

☆ நம் குணம், நினைவு, செயல் நிதானமிழக்குமிடத்தில் உள்ளது பெரிய அனுபவம்.

☆ அது சிருஷ்டி.

☆ பரிணாமம் என்பது சிருஷ்டியில் நிதானமாகச் செயல்படுவது.

☆ **அங்கு வளரும் ஆன்மா (Psychic being) வெளிப்படும்**.

☆ அது இதுவரை உலகிலில்லாதது.

☆ அது ஒருவருக்கு ஏற்பட்டால் அவருக்கு யோகம் பலிக்கும்.

☆ நேருவை அப்படிப்பட்டவர் என பகவான் கூறுகிறார்.

☆ பூரணயோகம் சமர்ப்பணத்தைக் கருவியாக்குகிறது.

☆ சமர்ப்பணம் வளரும் ஆன்மாவை வளர்க்கும்.

☆ அது எல்லா நிலைகளிலும் எழும்.

☆ செய்தியில் கூறியவை உலகிலுள்ள அனைத்து நிலையுமாகும்.

☆ எந்த எளிய வேலையிலும் சமர்ப்பணம் வாழ்வை, யோக

வாழ்க்கையாக்கும்.

- ☆ வழக்கமான வாழ்வு ஜீவனற்றது.
- ☆ சமர்ப்பணமான வாழ்வு ஆன்மாவால் நடத்தப்படுவது.
- ☆ எண்ணத்திலாரம்பித்து பிரம்மம் வரை பல கட்டங்கள் உள்ளன.
- ☆ வளரும் ஆன்மா எல்லாக் கட்டங்களிலும் வெளிப்பட வல்லது.
- ☆ ஆழ்ந்த அனுபவத்திற்கு ஆழ்ந்த சமர்ப்பணம் தேவை.
- ☆ சமர்ப்பணம் மனித வாழ்வை அன்னை வாழ்வாக்கும்.
- ☆ எளிய குடும்பம் அன்னை குடும்பமாவது யோகம் வாழ்வில் பூர்த்தியாவது.

○ ○ ○

## II/9) மனிதனுக்குத் துரோகம் செய்பவன் இறைவனுக்கு விஸ்வாசமானவன்.

➻ **துரோகம் விஸ்வாசமாகும்.**

- ☆ அனைவரும் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் எனில், அனைவரும் இறைவனுக்கு விஸ்வாசமானவர்கள்.
- ☆ ஆனால் ஒரு மனிதன் அடுத்தவனுக்குத் துரோகம் செய்வதைக் காண்கிறோம்.

  **இறைவனுக்கு விஸ்வாசமானவர் இறைவனுக்கு விஸ்வாசமான அடுத்தவருக்குத் துரோகம் செய்வது முரண்பாடு**.
- ☆ இது முரண்பாடானால், முரண்பாடு இறைவனிடம் இருக்க வழியில்லை.
- ☆ இருந்தால் அது மனிதனிடம் இருக்க வேண்டும்.
- ☆ ஊன்றிப் பார்த்தால் அது பார்வைக்கே முரண்பாடு, உள்ளபடி முரண்பாடில்லை, சுமுகம்.
- ☆ பார்வை மேலெழுந்தவாரியானால், அது முரண்பாடு.
- ☆ பார்வை ஆழமானால் அது சுமுகம்.



- ☆ இறைவனால் தீமை, இருள், முரண்பாடு சிருஷ்டிக்கப்பட-வில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம்.
- ☆ முதலாளி நிலம் வாங்கினார்.
- ☆ வாங்கியவருக்குள்ள பணம் வேறொருவரிடமிருந்தது.
- ☆ மானேஜரைப் போய் அப்பெரும் பணத்தைக் கேட்டு வாங்கி வரச் சொன்னார்.
- ☆ மானேஜர் ஆளாகப் போய் பணம் வாங்கி வரலாம். முதலாளி கொடுத்த சிறு தொகையை வசூலிக்கலாம். பெரும் தொகையைக் கேட்க மானேஜர் சரியில்லை. இது மானேஜருக்குத் தெரியும். முதலாளிக்குத் தெரியாது.
- ☆ **எந்த வேலையை யார் செய்வது என்ற சட்டம் அனைவரும் அறிந்ததே**.
- ☆ கவர்னருக்கு மந்திரி சபை பேப்பர்கள் போகும். அதை சபாநாயகரிடம் அனுப்புவார்கள்.
- ☆ அதை IAS ஆபீசர் மூலம் அனுப்புவதில்லை. ஒரு முதன் மந்திரி செய்தார். அவருக்கு வேலை போய்விட்டது.
- ☆ பெருந்தொகையை வசூல் செய்யும் திறமை மானேஜருக்கில்லை. அதை அவருக்குத் தருவது சரியில்லை.
- ☆ நிலம் எதிர்பாராத வாய்ப்பு பெற்றது. அதைப் பூர்த்தி செய்ய நிலத்தில் முதலைப் போல பல மடங்கு முதல் தேவை. முதலாளி மானேஜரை அதையும் திரட்டச் சொன்னார்.
- ☆ முடிவாக நிலம் மானேஜரிடம் அவருக்கு விருப்பமில்லாமல் மாறியது.
- ☆ **முதலாளி வேலை என மானேஜருக்குத் தருவது உரிமை கை மாறுவது**.
- ☆ வேறொரு முதலாளி மானேஜருக்கு லாபத்தில் பங்கு தருவதாக ஒப்பந்தம் எழுதினார்.
- ☆ இவருக்கு மானேஜரை ஏமாற்றும் நோக்கம் உண்டு.
- ☆ இலாபம் கணக்குப் போடும்போது முதலீட்டிற்கு - நிலத்தில் -

வட்டி போட்டுக் கழித்தார்.

☆ இது தொழிலில் இல்லாதது. நிலத்தில் அறவேயில்லாதது.

☆ மானேஜருக்கு முதலாளியின் எண்ணம் புரிந்தது. அவர் செய்யக்கூடியதில்லை.

☆ எழுத்து மூலம் ஒப்பந்தம் வேண்டாம், வாய் மொழி போதும் என்றார்.

☆ பல ஆண்டு கழித்து முதலாளி மானேஜரை நிர்ப்பந்தப்படுத்தி நிலத்தை எடுத்துக் கொள்ளச் சொல்ல வேண்டி வந்தது.

☆ **மானேஜருக்குத் துரோகம் செய்ய ஆரம்பித்த முதலாளி இறைவனுக்குள்ள விஸ்வாசத்தால் மானேஜருக்கு - இறைவன் மீது விஸ்வாசமுள்ள மானேஜருக்கு - சேவை செய்வதை அறியவில்லை.**

☆ மனிதனுக்குத் துரோகம் செய்வதாக நினைக்கலாம்.

☆ மனிதனால் இறைவனுக்கும், மனிதனுக்கும் விஸ்வாசமாகவே நடக்க முடியும்.

☆ எந்த ஒரு துரோகமும் ஆராய்ந்து பார்த்தால் விஸ்வாசமாகும்.

☆ நடத்தையால் மனிதன் செய்யும் துரோகமும் விஸ்வாசம். அது புரிய ஆன்மீகத் தலைகீழ் மாற்றம் புரிய வேண்டும். அதனால் தான் அகல்யா பஞ்ச கன்னிகைகளில் ஒருத்தியானாள்.

○ ○ ○

## II/10) தனக்குத் துரோகமிழைத்துவிட்டான் என நினைப்பது அறியாமை. அறியாமையில் இறைவனுக்குக் கருவியாக இருப்பது துரோகம் செய்வது.

➻ **இறைவன் கருவி கண்ணை மூடிச் செயல்படுவது துரோகம்.**

☆ வாழ்வில் அனைத்து உண்மைகளும், அனைவர் வாழ்விலும் வெளிப்படும்.



☆ பொதுவாக அது புரிவதில்லை.

☆ சிறப்பான மனிதருக்குச் சிறப்பான நேரத்தில் நிகழ்வது உண்மையைத் தெளிவாக்கும்.

☆ ராணா மீராபாய்க்கு விஷம் கொடுத்தான்.

☆ ஜாதகத்தைப் பார்த்த தகப்பனார் மகனால் ஜெயிலுக்குப் போக வேண்டும் எனத் தெரிந்து மகனைக் கொலை செய்தார்.

☆ கூட்டுக் குடும்பத்தைப் பிரிக்க விரும்பிய தம்பிக்கு எல்லா சொத்தையும் கொடுத்து தன் மனைவி, மக்களுடன் வெளியேறியவன் லாரியில் சிக்கி இறந்தான்.

☆ பெண் குழந்தை பிறந்தால் கொலை செய்யும் தாயார் உண்டு.

☆ Sparta ஸ்பார்ட்டா என்ற கிரேக்க நாட்டில் மெலிவான குழந்தைகள் பிறந்தால் அவற்றை வெயிலில் போட்டு இறக்க விடுவார்கள்.

☆ பட்டத்திற்காக உடன் பிறந்தவனை, தகப்பனாரை கொலை செய்வது ராஜ வம்சத்திற்குரிய பழக்கம்.

☆ குரு-சிஷ்ய உறவில் பல காரணத்திற்காக உயிரை எடுப்பது பரம்பரை.

☆ அரசியல் வாழ்வில் துரோகம் எளிமையாக எழும்.

☆ மகாத்மா காந்திஜீயையும் சுட்டுக் கொல்லப் பிரியப்பட்ட இலட்சியவாதி உண்டு.

☆ பெற்ற தாயாரை மனைவியின் பேச்சைக் கேட்டுப் பட்டினி போடும் மகனும் உண்டு.

☆ பஞ்சத்தில் பசியால் குழந்தைகளைத் தின்ற பெற்றோர் உண்டு.

☆ உலகில் கொடுமைகள் ஆயிரம் விதம்.

☆ நாம் எதையும் ஏற்க முடியாது.

☆ மனித வாழ்வு மனித சுபாவத்தை ஏற்காது.

☆ தெய்வீக வாழ்வு மனித சுபாவ துரோகம், கொடுமைகளை அறியாமையென அறிந்து ஏற்கும்.

☆ "கருடா சௌக்கியமா?" என்ற நிலையுண்டு.

☆ "ஏன் கொல்ல வந்த புலியைக் கொன்றாய்? புலி என்னைத் தின்ன வேண்டும் என நான் ஆசைப்பட்டேன்" எனக் கூறும் எளிய மனிதனின் தெய்வீக அன்பை நாம் அறிவோம்.

☆ துரோகம் என்பது பார்வை. அது அறியாமையின் பார்வை.

☆ துரோகமும் விஸ்வாசமும் ஒன்றே என்பது ஆன்மீகம்.

☆ நம் செயலெல்லாம் சேவை. அறிந்து செய்வன உண்டு. அறியாமல் செய்வன பல. அறியாமையால் செய்வதால் அது சேவையில்லாமல் போகாது. அறிவு வந்தால் உண்மை புரியும்.

*தொடரும்....*

❀❀❀

**ஜீவிய மணி**

**அடிமனம் ஆனந்தத்தை வலியாகத் தேடி அனுபவிக்கும்.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

"உற்ற நண்பர்கள் துரோகம் செய்வார்கள்; எதிரியாவார்கள்; அருமையான திட்டங்கள் சூன்யமாகும்; இமயமலை போன்ற ஆதரவு மலையென எதிர்க்கும்".

உன் இலட்சியத்தில் துரோகம் கலந்திருந்தால் அல்லது துரோகத்தில் நிறைவு காண்பவர் மீது உயிர் வைத்திருந்தால் வாழ்வு மேலே சொன்னது போலாகும்.

***துரோகி மீது உயிரான அன்பு ஊரையே எதிரியாக்கும்.***





**எடுத்த காரியம் சிரமமாக இருப்பதால் அதைக் கைவிட முயன்றால் பிறகு அது தீவிர வேகத்துடன் தன்னை வற்புறுத்தும் (Page 4 - *The Life Divine*) என்பது இந்த அத்தியாயத்தின் முக்கிய கருத்து**

**எந்த நல்ல காரியத்தையும் இடையில் கைவிடக் கூடாது என்று இதைக் கூறலாம்.**

இதே கருத்தை அத்தியாயத்தின் ஆரம்பத்தில் நாத்திகம் எவ்வளவு நாள் வெற்றிகரமாகச் செயல்பட்டாலும், முடிவில் ஆத்திகம் வேகமாகத் திரும்பி வரும் என்று கூறுகிறார்.

இந்தியாவில் ஜாதியும், ஐரோப்பாவில் (class) வகுப்பும் பல ஆயிரம் ஆண்டு ஆட்சி செலுத்தின. எத்தனை காலம் அவை வெற்றி பெற்றாலும் அதற்கு முடிவுண்டு. 1947க்குப் பின் தாழ்ந்த ஜாதிக்கு சலுகை உரிமையாக வந்தது. இன்று IAS ஆபீசர்களில் கால் பங்கு 1000த்திற்கு மேற்பட்டவர் தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவர். 1947க்கு முன் ஓரிருவர் இருந்தனரா எனவும் தெரியாது.

ஐரோப்பாவில் பிரபுக்கள் ஆட்சி செலுத்தினர். மற்ற எவருக்கும் வாழ்வில்லை. விவசாயக் கூலி பரம்பரை பரம்பரையாகக் கூலியாகப் பிறந்து கூலியாக இறந்தான். 1500இல் கொலம்பஸ் அமெரிக்கா என்ற சொர்க்க வாயிலைத் திறந்தார். இக்கூலிகள் ஆயிரக்கணக்காக, இலட்சக்கணக்காக அமெரிக்கா சென்றனர். அங்கு 10 மடங்கு அதிகக் கூலி பெற்றனர். 2 மாட்டுடன், வீடு, நிலத்துடன் மனிதனாக வாழ ஆரம்பித்தனர். நொண்டி, முடமும் 1½ வருஷத்திற்குள் நிலையை உயர்த்திக் கொண்டனர். தலைக்கு 640 ஏக்கர் (1 சதுர மைல்) நிலம் இனாமாகக் கிடைத்தது. மேலும்

மேலும் மக்கள் தொகை அதிகரிக்கும்பொழுது 640 ஏக்கரை 160 ஏக்கராகக் குறைத்தனர். ஐரோப்பாவில் நிலத்தையே அறியாத கூலி அமெரிக்காவில் 100 அல்லது 200 ஏக்கர் நிலம் இனாமாகப் பெற்று மிராசுதார், ஜமீன்தாராகிறான். நாள் செல்லச் செல்ல இனாம் நின்றது. ஏக்கர் 1 டாலர் விலைக்குக் கிடைத்தது. 1850இல் அமெரிக்கா உலகில் பெரிய பணக்கார நாடாயிற்று. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உலகையாளும் பெரிய நாடுகள். அவர்கள் உலக உற்பத்தியில் 7%, 6%, 5% உற்பத்தி செய்யும் பொழுது அமெரிக்கா 34% உற்பத்தி செய்தது.

- ✯ பணம் புழுதியாய் பெருகுகிறது என்றார் சரித்திர ஆசிரியர்.
- ✯ இங்கிலாந்தில் (duchess) பெருங்குடி பெண்மணிகளைவிட அதிக வசதியுடன் அமெரிக்க பன்றிகள் வளர்ந்தன.

1950இல் அமெரிக்கா உலகத்தின் தலைவனாகியது. எத்தனை ஆயிரமாண்டு மக்கள் உரிமையை மறுத்தாலும், ஒரு நாள் அவர்கள் எழுவார்கள். எழுந்தவரைத் தடுக்க இயலாது.

இன்று இந்தியாவில் தாழ்த்தப்பட்டோர் உயர்நிலைக்கு வந்தபடியிருக்கின்றனர்.

பெரும்பணம் சம்பாதிப்பவர்களில் பெரும்பாலோர் அவர்கள்.

அரசியல் தலைமை அவர்களை நாடுகிறது.

அன்று இவர்களைப் புறக்கணித்தவர் இருக்குமிடம் தெரியவில்லை.

அன்று உயர் ஜாதிக்காரர்கள் செய்த அட்டகாசம் பெரியது.

எவரும் கேட்கவில்லை.

இன்று தாழ்ந்தவர் எல்லாச் சட்டத்தையும் மீறி அட்டகாசம் செய்வதைத் தட்டிக் கேட்க எவரும் நினைக்கவில்லை.

❀ ❀ ❀





# நான் அவளில்லை

சமர்ப்பணன்

ஜன்னல் வழியே வீதியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரகுவின் பின்னால் சத்தமின்றி வந்து நின்ற சுபா, ‘‘திரும்பிப் பாருங்களேன்’’ என்றாள்.

தன்னைத் தன் கணவனுக்காக கவனமாக அலங்கரித்துக் கொண்டு, புன்னகையோடு நின்றிருந்த புத்தம்புது மனைவியைத் திரும்பிப் பார்த்த ரகு உற்சாகமானான். சுபாவின் கைகளைப் பற்றி தன்னருகே இழுத்துக் கொண்ட ரகு, ‘‘தேவதையைப் பற்றி கதைகளில் படித்திருக்கிறேன். உன்னைப் பற்றித்தான் அந்தக் கதைகளில் எழுதி இருப்பார்கள் என்று நினைக்கிறேன்’’ என்றான்.

இன்னமும் இதே போல கணவன் பேச வேண்டும் என்ற ஆசை ஏற்படுத்திய உள்ளக் கிளர்ச்சியுடன், கண்களை மூடி, காதுகளைத் திறந்து வைத்துக் கொண்டாள் சுபா. புதிய இல்லற வாழ்வின் இன்ப வானத்தில் எண்ணிப் பார்க்க முடியாத உயரத்தில் அவளது உள்ளப் பறவை சிறகடித்துப் பறந்தது.

‘‘பட்டுப் புடவை, அளவான கொண்டை, அதைச் சுற்றி மல்லிகைச் சரம்! என்ன அழகு, என்ன அழகு! என்னோடு வேலை பார்க்கும் ஆர்த்தி எப்போதும் இப்படித்தான் இருப்பாள். அவளைப் போலவே நீயும் அற்புதமாக இருக்கிறாய்!’’ அவளது காதருகில் பரவசத்துடன் சொன்னான் ரகு.

சுபாவின் சிறகொடிந்த உள்ளப் பறவை மிகவும் உயரத்திலிருந்து கட்டாந்தரையில் தலைகீழாக விழுந்து காயம்பட்டுத் துடிதுடித்தது.

தன்னைப் பலவந்தமாக ரகுவிடமிருந்து பிரித்துக் கொண்ட

சுபா, ‘‘இதோ வந்துவிடுகிறேன்’’ என்று கூறிவிட்டு படுக்கை அறைக்குள் நுழைந்தாள். நெடுநேரமாகியும் மனைவி வெளியே வராததாலும், வேலைக்காரி வந்துவிட்டதாலும், ‘‘சுபா, சுபா’’ என்று அழைத்தவாறு படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்தான் ரகு.

புடவையை மாற்றி சுரிதார் அணிந்து கொண்டு, படுக்கையில் குப்புறப் படுத்து விம்மி அழுது கொண்டிருந்த புது மனைவியைப் பார்த்ததும் பதறிப் போன ரகு, அவளருகே அமர்ந்து அவள் முதுகை வருடிக் கொடுத்தவாறு, ‘‘சுபா, ஏன் இப்படி அழுகிறாய்? என்ன நடந்தது?’’ என்று கேட்டான்.

பதில் வரவில்லை.

‘‘உனக்கு என்ன கவலை? என்னிடம் சொல்லக்கூடாதா? மனிதர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வதில் நான் கொஞ்சம் மந்தம். விஷயம் என்னவென்று வாய்விட்டுச் சொல்லேன்’’ என்றான் ரகு.

‘‘உங்களைத் தவிர வேறு யாரிடம் என்னால் சொல்ல முடியும்?’’ என்ற சுபா சிறிது நேர மௌனத்திற்குப் பின் படுக்கையிலிருந்து எழுந்து சென்று வேலைக்காரியை அழைத்தாள். அலமாரியிலிருந்த எல்லாப் புடவைகளையும் வெளியே எடுத்துப் போட்டவள், ‘‘மீனாக்ஷி, அம்மன் கோவிலுக்கு முன்னால் பிச்சைக்காரிகள் இருப்பார்கள். அவர்களுக்கு இவற்றைக் கொடுத்துவிடு’’ என்றாள்.

‘‘என்னம்மா இது, எல்லாமே ஒரு தடவைகூட உடுத்தாத புத்தம்புது புடவைகளாக இருக்கின்றனவே! பட்டுப் புடவை ஒவ்வொன்றும் பல ஆயிரங்கள் விலை ஆகுமே!’’ என்று வேலைக்காரி பதறினாள்.

‘‘வேண்டுதல்! உடனே இவற்றை எடுத்துக் கொண்டு போ’’ என்று உத்தரவிட்டாள் சுபா.

‘‘சரி அம்மா. வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குப் போகும் போது கொடுத்துவிடுகிறேன்’’ என்ற வேலைக்காரிக்குச் சுபா சொல்வதைச் செய்யலாமா, வேண்டாமா என்ற தயக்கம்.

அவள் புடவைகளை மூட்டையாகக் கட்டி ஒரு மூலையில்



வைத்துவிட்டுப் போனதும், சுபா குழப்பத்துடன் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்த ரகுவைப் பார்த்து, ‘‘நான் அவளில்லை’’ என்றாள்.

அங்கே இறுக்கமான அமைதி நிலவியது. வாய்கள் பேசவில்லை என்றால் எண்ணங்கள் ஓய்ந்துவிடுமா என்ன?

‘நான் சொன்னது தவறாகவே இருக்கட்டுமே, அந்த ஒரு சொல்லுக்காக இத்தனை கோபப்படுவாளா? இவளோடு எப்படி வாழ்நாள் பூரா சேர்ந்து வாழ்வது?’

‘என்னை என்போல பார்க்காமல், யாரோ ஒரு பெண்ணாகப் கற்பனை செய்து பார்ப்பவரோடு இனி எனக்கென்ன வாழ்க்கை வேண்டி இருக்கிறது? இவர் அந்தப் பெண்ணையே நன்றாக இரசிக்கட்டும். வேண்டுமானால் அவளுடன் சேர்ந்தேகூட வாழட்டும். நான் ஒதுங்கிக்கொள்கிறேன். இவர் சந்தோஷமாக நன்றாக இருக்கட்டும்’.

‘எத்தனை ஆசையோடு சேலை கட்டிக் கொண்டு எனக்குக் காட்ட வந்தாள்? நான்தான் முட்டாள்தனமாகப் பேசினேன். தவறு என் மீது இருந்தாலும் ஒரு வார்த்தை என்னைக் குறை சொல்லாமல் அதே சமயம் தன் மனக் கசப்பையும் வெளிப்படுத்திவிட்டாள். இதுவே சுபா வேறு ஒரு ஆணைப் பற்றிப் பேசி இருந்தால் நான் என்னவெல்லாம் ஆர்ப்பாட்டம் பண்ணி இருப்பேன்?’

‘இவர் எவ்வளவு நல்லவர்! எத்தனையோ பேர் பொய் சொல்லி மனைவியை ஏமாற்றித் திரியும்போது, தான் நினைத்ததை மறைக்க வேண்டும் என்றுகூட தோன்றாமல் குழந்தையைப் போல வெளிப்படையாகச் சொன்னாரே! எனக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை நான் நல்ல தன்மையாகச் சொல்லி இருக்கலாமே! இப்படியா ஆவேசப்பட்டு அதை வெளியிலும் காட்டுவது? என்ன பெண் நான்! பிடிக்கவில்லை என்ற எண்ணத்தையே விட்டுவிட்டால்தான் என்ன கேடு?’

‘எனக்குப் பிடித்ததைப் பற்றி பேசுவதற்குப் பதில் சுபாவிற்குப் பிடித்ததைப் பற்றி மட்டும் இனி நான் பேசினால் என்ன?’

‘ஐயோ பாவம், இவர் முகம் வாடிவிட்டதே! அந்தப் பெண்

நாசூக்காக, நாகரிகமாக இருப்பாள் என்றால் நானும் அவளைப் பார்த்து நல்ல விஷயங்களைப் பழகிக் கொள்ளலாமே. பொறாமை-யாகத்தான் இருக்கிறது. ஆனாலும் இவருக்காகப் பொறுத்துக் கொள்ளலாம். இந்த சனிக்கிழமை அந்த சனியனை விருந்துக்குக் கூப்பிடலாம்'.

''என்னை மன்னித்துவிடு சுபா, எனக்குப் புத்தி வந்துவிட்டது. இனி எந்தப் பெண்ணாலும் உனக்கு பிரச்சினை வராது'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்ன ரகுவின் மார்பில் உரிமையுடன் சாய்ந்துகொண்டாள் சுபா. ''என்ன இது, என்னிடம் போய் மன்னிப்பு கேட்டுக் கொண்டு?'' என்றாள்.

''அம்மா, நான் சேலைகளை எடுத்துக் கொண்டு கிளம்-பட்டுமா?'' அறைக்கு வெளியே இருந்து வேலைக்காரி குரல் கொடுக்க, ''இன்றைக்கு வேண்டாம்'' என்று சுபா சொன்னாள்.

''தலைமுடிக்கு என்ன எண்ணெய் போடுகிறாய்? எவ்வளவு அருமையான வாசம் வருகிறது!'' என்ற ரகு அவள் கூந்தலை முகர, வெட்கத்துடன் புன்னகைத்த சுபா தன் கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

*முற்றும்.*

❀ ❀ ❀

## அறிவிப்பு

டிசம்பர் 2010 இதழுடன் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினைப் புதுப்பிக்க வேண்டுகிறோம்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# முழுமுயற்சி

பெரும் பொறுப்பிலுள்ளவர் வெகு நேரம் வேலை செய்வார்கள். வேலைக்கு முடிவிருக்காது. திறமைசாலிகள் செய்வது கூடி வந்தால் செய்வதை நிறுத்தமாட்டார்கள். எனினும் ஒரு நாளில் இருபத்தி நாலு மணி நேரமேயுள்ளது. தூங்கவும், மற்ற தினசரி கடமைகட்கும் நேரம் தேவை. இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போன அன்பர், அன்னை கோட்பாடு என்பதால் தம் முழு முயற்சியை முடித்துவிட நினைத்தார். அமெரிக்காவில் ஐந்து நாள் வேலை; சனி, ஞாயிறு வேலையில்லை. மனைவியை வேலைக்கனுப்பினார். அவர் மனம் திருப்திபடவில்லை. அடுத்த முழு நேர வேலையை மேற்கொண்டார். இது சிந்தனைக்கு எட்டாதது. எப்படி முடியும் என எவரும் கருதவும்மாட்டார்கள். தீவிர முயற்சி முழு முயற்சியாக வேண்டும்; கடைசி சொட்டு தெம்பும் செலவிடப்பட வேண்டும் என்ற எண்ணத்தால் செய்த வேலையிது. இத்துடன் MBA பிரைவேட்டாகப் படிக்க ஆரம்பித்தார். அந்த நேரம் அவர் எனக்குக் கடிதம் எழுதினார். மேலும் தாம் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டு எழுதினார். அவருக்கு எழுதிய பதிலை இங்கு தருகிறேன்.

கணவன், மனைவி இருவருமாக உங்களால் முடிந்த அனைத்தையும் செய்து முடித்துவிட்டீர்கள்.

இது பாராட்டுதலுக்குரியது.

இனி உடலால் செய்யக்கூடியது என்பதில்லை.

மேலும் செய்யக்கூடியது மனம் எடுக்கும் முயற்சி.

அதை விவரமாகக் கீழே தருகிறேன்.

*(பின் பக்க அட்டையில் தொடரும்)*

❀❀❀

*(முன் பக்க அட்டைத் தொடர்ச்சி)*

- முயற்சிக்கு முடிவில்லை.
- உடல் உழைப்பு முடிந்தால் உணர்வால் கடமையைப் பல மடங்கு பூர்த்தி செய்யலாம்.
- உடலையும், உணர்வையும் கடந்தது மனம்.
- மனம் அறிவின் விளக்கம்.
- அறிவின் ஆராய்ச்சியில் அதிகபட்ச உயர்வை குறைந்தபட்ச காலத்தில் எட்டலாம்.

  (கம்பனி முதலாளி - CEOவின் - திறமைகளை ஆராய்ந்து அவற்றை எப்படிப் பெறலாம் என விவரமாக அறிந்தால், அப்பதவியை அவர் குறைந்த காலத்தில் பெறலாம்).
- ஆத்ம முயற்சி அறிவின் சிகரத்தை அளவுகடந்து கடந்தது.
- ஆத்ம முயற்சி பலன் தேடாதது, முயற்சியே பலன்.
- சிந்தனை மனத்தில் ஆழத்தைத் தொடும்.
- சிந்தனை மௌனமானால் ஆத்மா விழிப்புறும்.
- ஆத்ம விழிப்பு அகிலம் முழுவதும் உட்கொண்ட பார்வை.
- உள்ளே சென்று, மனத்தைக் கடந்து, ஆத்ம வாயிலைத் திறந்து, அமைதியுடன் ஆழத்தில் சற்று நேரம் நிலைப்பது, யோக சமர்ப்பணம்.
- அந்த நிலை, முயற்சி, பலன், கடமை, நோய், குணம் இவற்றைக் கடந்தது. இந்த எல்லா பலன்களையும் உட்கொண்டது.
- நாம் அறிவது சிறியது, அன்னை தர முயல்வது பெரியது.
- எதையும் பெறும் எண்ணமழிந்து,<br>எல்லாவற்றையும் சரணடையும்<br>உளப் பாங்கு உத்தமர்க்கும் உயர்ந்தது.

***பிறர் எண்ணத்தை அறிவது***<br>***பிறருக்கு அதிர்ஷ்டம் தேடுவது***<br>***பரந்த மனம் உலகை உட்கொள்ளும்.***

❀❀❀

December 2010 Jiviyam 16 Malar 8
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

ESSAYS ON ACCOMPLISHMENT ரூ.150/-
N.Asokan

கர்மயோகியின்

அன்னையின் ஆன்மீகப்பரிசு ரூ.100/-
லைப் டிவைன் - கருத்துகள் ரூ.100/-
பரம்பொருள் III ரூ.200/-
எங்கள் குடும்பம் (பாகம் 2) ரூ.250/-
உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் ரூ.100/-
யோக வாழ்க்கை விளக்கம் IV ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

லைப் டிவைன் விரிவுரைகள் ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

SATYA JYOTHI ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191